
15வது வருடத்தில்

# விளம்பரம்™
VLAMBARAM™

☎ 416-282-8059 — 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்

OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

வீடு விற்க, வாங்க...
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
Direct: 416.315.9397
OFFICE: 416.321.6969
Sales Agents Welcome

நதி 15 | பாலம் 15 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 01, 2005



02 வாழ்வில் வெற்றிபெற




17 வெயிலும் பனியும்



23 பாசத்தின் வேர்

# இலங்கையில் விரைவில் ஜனாதிபதி தேர்தல்?





## ரனிலா? ராஜபக்சவா?

*இலங்கையின் அடுத்த ஜனாதிபதிக்கான தேர்தல் பற்றிய சர்ச்சை மிகத் தீவிரமாக எழுந்துள்ளது. ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு நவம்பரில் நடைபெற வேண்டும் என்று ஒரு சாராரும், இல்லை அது அடுத்த ஆண்டு ஒக்டோபர், அல்லது நவம்பரில்த்தான் நடைபெறும் என்று இன்னொரு சாராரும் கூறிவருகின்றனர்.*

*அதே சமயம் இலங்கையின் இரண்டு பிரதான கட்சிகளும் ஜனாதிபதி தேர்தலுக்குத் தயாராகிவிட்டன. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உத்தியோக பூர்வமான வேட்பாளர் யார்*

தொடர்ச்சி 12ம் பக்கம்

## இளமையில் இருந்து முதிர்ச்சி

சந்திர, சூரிய நட்சத்திரங்களை விட அறிவே அவசியமானது

மரத்தில் இருந்து பிடுங்கப்பட்ட ஓர் அப்பிள் பழம் ஒரு மணிநேரத்தில் பெருமளவு உயிர்ச்சத்தை இழந்து விடுகின்றது. இந்தப் பழம் கடைகளை வந்து அடைய முன்னதாக ஏராளமான கட்டங்களைத் தாவித் தாண்டுகின்றது.

இந்த சமயங்களில் எல்லாம், உயிர்ச்சத்துக்கள் இழக்கப்படுகின்றன. கடைசியில் நமது வீட்டுக்குள் வந்து குளிர்சாதனப் பெட்டியில் வெகு பாதுகாப்பாக இருக்கின்ற போதும், இதே அப்பிள் பழத்தில் இருந்து உயிர்ச்சத்துகள் இழக்கப்படுகின்றன.

உலகமக்கள் தொகையில், பத்தாயிரம் பேரில் ஒருவர் மட்டுமே தனது சொந்த உணவை தானே தனது தோட்டத்தில் பெற்றுக் கொள்ளுகின்றார். மற்ற எல்லோருமே வாரக் கணக்கிலும், மாதக் கணக்கிலும் பயணம் செய்து, சூரிய ஒளியிலும், குளிர்ச்சாதனப் பெட்டிகளிலும் கிடந்ததோடு மட்டு மன்றி, இரசாயனக் கலவைகள் தெளிக்கப்பட்ட உணவுப் பொருட்களையே உண்ணுகின்றார்கள்.

நீண்டகாலம் உயிர்வாழ்வதற்கு மட்டுமின்றி ஆரோக்கியமாக உயிர்வாழவும், உயிர்ச்சத்துக் களும், கனியுப்புகளும் மிக மிக அவசியம் என்பதைக் கடந்த இதழ்களில் பார்த்தோம். American Medical Association, எல்லோரும் தமக்குத் தேவையான உயிர்ச்சத்துக்களையும், கனியுப்புகளையும் உள்ளெடுக்கும்படி வெகு ஆணித்தரமாக சிபாரிசு செய்கின்றது.


உயிர்ச்சத்துக்களினதும், கனியுப்புகளினதும் அவசியத்தை யும், தேவையையும் பற்றி எழுதிக் கொண்டே போகலாம். அடிப்படையில் உயிர்சத்துக்களும், கனியுப்புகளும் நமது


தொடர்ச்சி 03ம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரங்கள்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்
காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC-(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"

HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416•817•8479
Bus: 416•321•6969
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER


Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)
• Auto • Home • R.R.S.P • Life
• Disability • Mutual Fund • Group Insurance • Child Education
• Travel & Business

416.321.1515 •905.294.2429
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969

HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto

# வாழ்வில் வெற்றி பெற

இது ஒரு புதிய கட்டுரைத் தொடர். இத்தொடர் நிச்சயம் உங்களுக்குத் தன்னம்பிக்கையைத் தரும். தைரியத்தைத் தரும். கனடாவில் பொருளுடன் வாழ் வதற்கான ஆலோசனைகளைத் தரும். பொருளைத் தேடும் வழிகளையும் தேடிய பொருளைப் பெருக்கும் வழிகளைப் பற்றியும் கூட கருத்துப் பரிமாற்றம் செய்ய உதவும். பல வாரங்கள் தொடரப் போகும் இந்தக் கட்டுரையைத் தொடர்ந்து படித்துப் வாருங்கள். உங்கள் எண்ணங்களையும், "விளம்பரம்" வாயிலாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ளலாம்.

### பகுதி - 07

சரி கட்டுரையை ஆரம்பிப்போமா? இன் றைக்கு நாம் பலரிடமும் காண்பது என்ன? விரக்தி, வேதனை. வசதியான வாழ்க்கை தோன்றி மறையும் மின்னலைப் போன்று விரக்தி எப்போதோ ஒருமுறை வந்து போனால் தவறு ஒன்றுமில்லை. விரக்தியே வாழ்வானால் எப்படி?

விரக்தி என்றால் என்ன?

ஒரு தோல்வி மனப்பான்மை, எதையும் சாதிக்க முடியவில்லையே என்றன எண்ணம், பயம், ஏதோ ஒன்று அல்லது எல்லாம் கலந்த ஒன்று. சரி இந்தத் தோல்வி எங்கேயிருந்து வந்தது? உங்களுக்குள் இருந்து வந்தது. இதற்கு விதி விலக்கு ஏதேனும் உண்டா? இல்லை. இல்லவே இல்லை. தோல்வி என்று ஒன்றை உங்கள் மனம் முத்திரை குத்தாத வரையில் அது தோல்வியே இல்லை. உங்கள் வெற்றிக்குத் தடையா யிருப்பவர் யார்? நீங்கள் தான், உங்களைத் தவிர வேறு யார்? வெற்றி என்பது உங்கள் திறமையில் மட்டுமல்ல. அது உங்கள் எண்ணத்திலும் உள்ளது. குறிப்பாக உங்கள் தோல்விகளை நீங்கள் எப்படி எதிர் கொள்ளப் போகிறீர்கள் என்பதில் உள்ளது. தோல்வியைத் ஒரு தொடராகப் பாவித்து, அது எப்போது தொடங்குகின்றது என்று பார்ப்போம். ஒருவன் ஓட்டப்பந்தயத்தில் ஓட விரும்பினான். ஆனால் ஓட ஆரம்பிக்கும் போதே கீழே விழுந்து விட்டான். இது தோல்வியா? இல்லவே இல்லை. விழுந்தவன் எழுந்து ஓட முயற்சிக்கவில்லை என்றால் அப்போது தான் உண்மையான தோல்வி ஆரம்பமாகின்றது.

தோல்வியே வெற்றிக்கு முதல்படி, கேட்டதில்லையா நீங்கள்?

இறைவன் ஒரு கதவைச் சாத்தும் போது மற்றொரு கதவைத் திறக்கிறான் என்கிறார் கள். உங்கள் விழிகளைக் கூர்மையாக்கி வழியை நோக்கினால், திறக்கப்பட்ட கதவுகளைக் காண்பீர்கள். இங்கிலாந்து பிரதமர் சர்ச்சில் புகழின் உச்சியில் இருந்த சமயம் அது. அவர் படித்த பள்ளிக்கு அவரைப் பேச அழைத்திருந்தார்கள். கூட்டம் நிரம்பி வழிந்தது. புகைப்படக் கருவிகள் மின்னின. பத்திரிகையாளர் பலர் கூடியிருந் தனர்.

சர்ச்சிலைப் பேச அழைத்தனர். கூட்டம் ஆவலோடு அவர் பேசுவதைக் கேட்கக் காத்திருந்தது. மெதுவாக நடந்து மைக் அருகே சென்றார். தன் ஆடையில் இருந்த பையில் இருந்து ஒரு சிறு காகிதத் துண்டை வெளியே எடுத்தார். அந்தக் காகிதத் துண்டைப் பார்த்து தனது மிகச் சிறிய உரையைப் பேசி முடித்தார். அவர் பேசியது இதுதான்.



ஒரு போதும் (Never)
ஒரு போதும் (Never)
ஒரு போதும் (Never)
ஒரு போதும் (Never)
ஒரு போதும் (Never)
(முயற்சியைக்) கை விடாதே (Give up).

பழையபடி காகிதத் துண்டைப் பையில் வைத்தார். பிறகு தனது இருக்கைக்குச் சென்று அமர்ந்தார். கூடியிருந்தோர்க்குச் சிறிது நேரம் ஒன்றும் புரியவில்லை. பிறகு எழுந்த கரவொலி ஓய வெகு நேரமாயிற்று.

நம்பிக்கையே வாழ்வின் விடி வெள்ளி. எனவே கடந்த காலத் தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். முயற்சி, முயற்சி. அந்த முயற்சியை ஒரு போதும் கைவிடாதீர்கள்.

மாபெரும் காப்பியங்கள் கூட வரி வரியாகத்தான் எழுதப்பட்டன. இமய மலையின் சிகரத்தை ஏறி வெற்றி கண்டவர்கள் கூட அடி அடியாகத் தான் ஏறி வெற்றி கொண்டார்கள். ஆமைக்கும், முயலுக்கும் நடந்த பந்தயத்தில் வெற்றி கண்டது ஆமைதானே?

எல்லாம் விதி என்பது வெற்றுப் பேச்சு. வாழ்வில் வெற்றி பெற வேண்டுமா? போராடுங்கள்.

**பெரி. முத்துராமன்**

உங்களை எதிர்த்து முதலில் போராடுங்கள். உலகத்தில் மூன்று வகை மனிதர்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள்.

1. ஒன்றை நிகழச் செய்யும் மனிதர்கள்.

2. ஒன்று நிகழ்வதைப் பார்த்திருக்கும் மனிதர்கள்.

3. ஒன்று எப்படி நிகழ்ந்தது என்று ஆச்சரியப்படும் மனிதர்கள்.

இந்த மூன்று வகையில் நீங்கள் எந்த ரகம்?



# வானொலித் தொடர்பாடல் வளம் பெறக் கரங்கொடுப்போம்

வானொலி தொடர்பாடல் என்பது ஒரு வழிப்பாதையல்ல. அது இருவழிப்பாதை. கலையகத் திலிருந்து வானலையூடாக ஒலிபரப்பாளர் அனுப்புவதை கிரகிக்கும் நேயர்கள் தமது பிரதிபலிப்பை அவருக்கு தெரியப்படுத்த வேண்டும். அதைக் கேட்டு ஒலிபரப்பாளர் அடுத்த ஒலிபரப்பை திட்டமிட்டு நடத்தினால் தொடர்பாடல் உயர்வடையும். கேட்காவிட்டால்? கேட்டும் கேட்காதது போல் நடந்து கொண்டால்? தேய்வடையும் - தொடர்பாடல். ஒலிபரப்பின் தரம் உச்சக் கட்டம் பெற நேயர்களால் நல்ல பங்களிப்பினை வழங்கமுடியும். இதனாலேயே ஒலிபரப்பாளர்கள் தம்மை வழிநடத்தும் எஜமானர்களாக நேயர்களைக் கொள்கிறார்கள். அப்படிக் கருதாத ஒலிபரப்பாளர்களே அவர்களை நாளாந்தம் கொல்கிறார்கள். நேயர்களும் என்ன? அவர்களுக்கு சற்றேனும் சளைத்தவர்களா? அவர்கள் கூட ஒலிபரப்பாளர்களின் நல்ல எதிர்காலத்தைக் கொல்லும் திறன் கொண்டவர்களாகவே விளங்குகிறார்கள். ஒலி பரப்புப் பயிற்சி என்று ஒன்று இருப்பது பற்றி அறியாமலேயே வானலைகளில் தத்தி தத்தி நடைபயிலத் தொடங்கும் மழலைமொழிக்காரரைப் பார்த்து ஒரே போடால் போட்டு விடுவார்கள். எப்படி? உங்களுக்கு சிம்மக்குரல்! கேட்டவர் பிடரியை சிலிர்த்தெழுவார். அன்றுதொட்டு அவர் எடுப்பது சிம்மா அவதாரம். எவரையும் ஏறெடுத்தும் பார்க்க மாட்டார். தன்னை எல்லோரும் புகழ்ந்து தள்ளவேண்டும் என்றே எதிர்பார்ப்பார். "சிங்கநடை போட்டு சிகரத்தில் ஏறு" பாட்டை அடிக்கடி போட்டு எம்மையும் கேட்க வைப்பார். நல்லதொரு ஒலிபரப்பாளராக வரவேண்டியவரின் எதிர்காலம் அங்கே கொல்லப் பட்டு விடுகிறது. நேயர்கள் என்னை எடுத்த எடுப்பிலேயே அங்கீகரித்து விட்டார்கள் என அவர் தன்னிச்சையாக தீர்மானித்து விடுவதால் ஒலிபரப்பு ஆளுமை என்பது குறித்து கிஞ்சித்தேனும் கவலை கொள்ளமாட்டார். எல்லாம் தெரிந்தது போல் நடிக்கத் தொடங்கி விடுவார். மூத்த ஒலிபரப்பாளர் பற்றி விமர்சனமும் செய்வார். இவ்வாறு அவர் செய்வதென்ன அறிவிப்பா? அதற்கு ஆமாப் போடவும் காத்திருப்பர் சில நேயர்கள். இளம் ஒலிப்பாளர்கள் எந்தவிதத்திலும் வளர்ந்து விடக்கூடாது என்பதில் அவ்வளவு அக்கறை அவர்களுக்கு. இளம் ஒலிபரப்பாளரின் உள்ளங் குளிர புகழுரைகளை செப்பிவிட்டால் அவரது அன்பை ஒரு நொடியில் அபிவிடலாம் என்ற சூட்சுமம் தெரிந்த அசகாயசூரர்கள். நேயர்களே! வேண்டாமே இந்த விபரீத விளையாட்டு. நீங்கள் ஒலிபரப்பாளரை சீராட்ட அவர் பதிலுக்கு உங்களை ஓராட்ட... பரஸ்பரம் பாராட்டு மழையில் இருதரப்பும் நனைய... ஆஹா! ரொம்பப் பிரமாதந்தான் போங்கள். இனியாவது அவர்களின் ஆரோக்கிய மான வளர்ச்சிக்கு கைகொடுப்போம் வாருங்கள். ஒலிபரப்பாளர் தமிழ் வார்த்தைகளை தவறுதலாக உச்சரித்தால் சுட்டிக்காட்டுவோம். தரக்குறைவான சொற்களைச் சொன்னால் தட்டிக் கேட்போம். எழுவாய், பயனிலை இன்றி பேசினால் திருத்திப் பார்ப்போம். இடங்கள், படங்கள், பாடியவர்களின் பெயர்கள் என்பவற்றில் தவறுவிட்டால் சொல்லிக் கொடுப்போம். ஆபாசம் தொனிக்கும் இரு பொருள்படுகின்ற வசனங்களைச் சொன்னால் இனி இது வேண்டாம் எனக் கூறுவோம்.

**வி. என். மதிஅழகன்**

முக்கி முனகும் ஒலிபரப்பாளர்களைக் கண்டு "உங்கள் குரல் அந்த மாதிரி" என அவரை உச்சாணிக் கொம்புக்கு ஏற்றாதிருப்போம். பெண் நேயர்களுடன் ஜொள்ளு விடும் ஒலிபரப்பாளர்களை சொல்லின் செல்வர்கள் எனக் கூறாதிருப்போம். அவர்கள் "ஜொள்ளின் செல்வர்கள்" மட்டுமே. தற்காலத்தில் இதெல்லாம் சகஜம் என இணங்கிப் போவது சரியல்ல. நிகழ்ச்சிகள் தொடர்பாக ஆக்கபூர்வமான விமர்சனங்களை தெரிவியுங்கள். ஆலோசனைகளை முன்வையுங்கள். சிறப்பான ஒலிபரப்பை பிரத்தியேகமாக நடத்தினால் பாராட்டி மகிழுங்கள். வெறுமனே ஒலிபரப்பாளர்களைக் கேட்டமாத்திரத்தே புகழுரைகளை கொட்டத் தொடங்கிவிடாதீர்கள். "மொட்டச்சியை கூந்தலழகி" எனச் சொல்வது கேட்போருக்கு கேலிக் கூத்தாகவே தென்படும். நேயர்களே! நீங்கள் யார்? லகர, ழகர, ளகர பேதம் தெரியாமல் ஒரு ஒலிபரப்பாளர் பேசினால் கூட நாடாளு மன்றத்தில் குரல் எழுப்பிய அங்கத்தவர் க. பொ. இரத்தினம் பிறந்த நாட்டில் இருந்து வந்தவர்கள் அல்லவா? எல்லாம் தெரிந்து கொண்டும் தெரியாதவர்கள் போல் நடிப்பதேற்கு? பிழை யென்று தெரிந்திருந்தும் சகித்துப்போகும் பழக்கம் எப்படி வந்தது உங்களுக்கு. உங்களுக்கு தெரியுமா? சிங்கப்பூர் ஒலிபரப்பில் சீனமொழியில் சேவையாற்ற அறிவிப்பாளர்கள் சீனாவில் இருந்தே அழைக்கப்படுவார்கள். ஏன்? சிங்கப்பூரில் உள்ள சீன மக்களின் உச்சரிப்பு சரியில்லையாம். எம்மவர்கள் தமிழை சரியாகக் கையாள முடியாவிட்டால் எங்கிருந்து அழைக்கப்போகிறோம்? மற்றாசில் இருந்தா? எம்மை நாமே திருத்திக் கொள்ள வேண்டாமா? ஆங்கில வார்த்தை ஒன்றை பிழையாக உச்சரித்தால் திருத்தாமல் இருப்பதுண்டா? தமிழுக்கு மாத்திரம் ஏன் இந்தக் கதி? ஒலிபரப்பு யுக்திகள் மாற்றமடையலாம். புதிய தொழில்நுட்பத்தில் மகத்துவம் பெறலாம். ஆனால் மொழிப் பிரயோகத்தை எமது வாய்க்கு வந்தபடி நடத்துவது நல்லதல்ல. ஆங்கிலப் புலமையை ஒருவர் வளர்த்துக் கொள்ள ஆர்வப்பட்டால் "பி.பி.சி. கேளும்" என உற்சாகப் படுத்துகிறோம். அதுபோல் தமிழ்ப் புலமையை வளர்த்துக்கொள்ளவல்ல - சும்மா செவிகுளிர தமிழைக் கேட்கவாவது இந்த நிலையத்தைக் கேளுங்கள் எனச் சொல்ல தரணியெங்கிலும் உள்ள வானொலி நிலையங்களின் தரம் மென்மேலும் ஓங்கி உயரட்டும்.

அதுவரையில் எமது ஒலிபரப்பாளர்கள் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் ஒலிபரப்பை முன்னெடுத்து வந்தாலும் அவர்களை அதிகமாகப் பாராட்டிக் கெடுக்காதிருப்போம். ஆக்கபூர்வமான பிரதிபலிப்பை வழங்கி வானொலித் தொடர்பாடல் வளம்பெறக் கரம் கொடுத்திடுவோம்.


விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்
Certified Inspection Specialist

Expert Building Inspections LTD.

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# இளமையில் இருந்து முதிர்ச்சி அடைவதைத் தடுக்கின்ற உயிர்ச்சத்து எது?

## நீண்டகாலம் உயிர்வாழ்வதற்கான இரகசியங்கள் - 11

உடலுக்கு மிக அத்தியாவசியமானவை என்பதை உணர்ந்து கொண்டால் அதுவே நமக்குப் போதுமானது.

உடல் வளர்ச்சிக்கு, கலங்கள் சரியான முறையில் பிரிவடைவதற்கு தினமும் உயிர்ச்சத்துக்கள் தேவை. நோய்கள் உண்டாகினால், உடனடியாக நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்து (Immune System) கிருமிகளுடன் சண்டை போடவும் உயிர்ச்சத்துகளும், கனியுப்புகளும் அவசியம்.

உடலில் காயம் ஏற்பட்டு இரத்தம் வழியும் போது, இந்த இரத்தப் போக்கை கட்டுப்படுத்தி தொடர்ந்து இரத்தம் வழியாமல் தடுப்பதற்கு உயிர்ச்சத்து தேவையாய் உள்ளது.

இவற்றை விட பல நோய்கள் உருவாகி நமது உயிருக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்கவும் உயிர்ச்சத்துகளும், கனியுப்புகளும் அவசியம் என்பதையும் பார்த்தோம்.

### செழியன்

கனியுப்பான துத்தநாதம் (Zinc) நமது நோய் எதிர்ப்புத் தன்மையை (Immune system) அதிகரிக்கச் செய்கின்றது. அதுமட்டுமல்ல ஆண்களின் விந்து (sperm) விருத்திக்கும், பெண்களின் கருப்பையில் இருந்து முட்டை உருவாகுவதற்கும் (ovulation), இவ்வாறு உருவாகும் விந்தும், முட்டையும் இணைந்து கருக்கட்டல் நடைபெறுவதற்கும் (fertilization) துத்தநாதம் அவசியமாக உள்ளது.

நாம் உண்ணுகின்ற உணவுப் பொருட்களில் இருந்து நமது உடலுக்குத் தேவையான உயிர்ச்சத்துகளையும், கனியுப்புகளையும் நாம் பெற்றுக் கொள்ளுகின்றோமா?

ஒரு வாழைப்பழத்தையோ, ஒரு கரற்டையோ அல்லதும் போனால் ஒரு தக்காளியையோ சாப்பிட்டு விட்டு உடலுக்குத் தேவையான உயிர்ச்சத்துகளையோ, கனியுப்புகளையோ பெற்று விட்டோம் என்று திருப்திப்பட்டுக் கொள்ளாதீர்கள்.

நமது உடலுக்குத் தேவையான உயிர்ச் சத்துக்களையும், கனியுப்புகளையும் பெற்றுக் கொள்ள நாள் ஒன்றுக்கு ஆறுவகையான மரக்கறிகளையும், இரண்டு அல்லது மூன்று வகையான பழங்களையும் சாப்பிட்டாக வேண்டும். அப்படி சாப்பிட்டாலும் அது நமது உடலுக்குத் தேவான அளவு உயிர்ச்சத்துக்களையும், கனியுப்புக்களையும் தருமா என்பது சந்தேகமே. நோபல் பரிசு பெற்ற பேராசிரியரும், உயிர்சத்து ஆராட்சியாளருமான லீனஸ் போலிங் கூறும் போது, “உயிர்ச்சத்துக்கள் உணவுப் பொருட்களில் இருந்து இழக்கப்படுகின்றன. இதற்குக் காரணம் நவீன முறையிலான பதனிடும் முறைகளும், சமையல் முறைகளுமே காரணமாகும்” என்று கூறுகின்றார். உணவுப் பொருட்களில் இருந்து கிடைக்கின்ற உயிர்ச் சத்துக்கள் நமது உடலுக்குப் போதுமானதாக இல்லை என்பதற்கு போலிங் கூறுவது மட்டும் காரணமல்ல. நவீன முறையில் செய்யப்படும் விவசாய முறையினால் பழங்கள், காய்கறிகளில் இருக்கின்ற உயிர்ச்சத்துக்கள் அழிக்கப் படுகின்றன. இலாப நோக்கம் காரணமாகப் பயன்படுத்தப்படுகின்ற கிருமிநாசினிகள், செயற்கை உரங்கள் என்பனவும் உயிர்ச்சத்துக் களை அழிக்கின்றன.

வியாபார நோக்கத்தில் உரிய காலத்துக்கு முன்னதாகவும், சில சமயம் பின்னதாகவும் பறிக்கப்படுகின்ற காய்கறிகள், பழங்களில் இருந்தும் உயிர்ச்சத்துக்கள் அழிக்கப்படுகின்றன.

உணவுப் பொருட்கள் சேமித்து வைக்கப்படும் போது ஒரு பகுதி உயிர்ச்சத்துகளை இழக்கின்றன. உங்கள் குழந்தைக்கு ஆசையாக நீங்கள் வாங்கி வருகின்ற தோடம்பழ சாற்றில் இருந்து உயிர்ச்சத்து சி, குளிர்ச்சாதனப் பெட்டியில் இருக்கின்ற காரணத்தினாலே இழக்கப்படுகின்றது. உருளைக்கிழங்கு மூன்று மாதத்திற்குச் சேமித்து வைக்கப்படும் போது, அது மிகச் சிறந்த சேமிப்பு முறையாக இருந்தாலும் கூட, ஐம்பது வீதமான உயிர்ச்சத்து சி அழிக்கப்படுகின்றது. Freeze பண்ணும் போதும், சேமித்து வைக்கும் போதும் உணவுப் பொருட்களில் உள்ள உயிர்ச்சத்து ஈ அழிந்து போகின்றது. சூரிய ஒளி உயிர்சத்து பி2 வை அழித்து விடும். சூரியன் உதித்து, சூரிய ஒளி வந்தபின் பறிக்கப்படும் பழங்களிலும், மரக் கறிகளிலும் இருந்து இவ்வாறு சில வகையான உயிர்ச்சத்துக்கள் அழிக்கப்பட்டு விடும்.

பாணை வாட்டும் போது உயிர்ச்சத்து பி பாணில் இருந்து அழிந்து போகின்றது. கழுவும் போது கூட நீரில் கரையும் தன்மையான உயிர்ச்சத்துக்கள் இழக்கப்படுகின்றன. அவரை இனக் காய்கறிகள் பத்து நிமிடம் தண்ணீரில் இருந்தால் இருபது வீதம் முதல் நாற்பது வீதமான உயிர்ச்சத்து பியும், முப்பந்தைந்து சதவீதமான உயிர்ச்சத்து சி யும் இழக்கப்படுகின்றது.

பழங்களிலும், மரக்கறிகறிகளினதும் தோலின் அடிப்பாகத்தில் இருக்கின்ற உயிர்ச்சத்துக்கள் தோல்களை அகற்றும்போது தோலுடன் சேர்ந்து வெளியேறிவிடுகின்றன. உருளைக்கிழங்கின் தோலை அகற்றும் போது, உருளைக் கிழங்கில் இருக்கின்ற உயிர்ச்சத்து சி யில் நாற்பது சதவீதமானது இல்லாமல் போகின்றது. கரற்றின் தோல் சீவப்பட்ட பின் எஞ்சியிருக்கின்ற கரோட்டின் ஒரு வீதம் மட்டுமே. அப்பிள் பழத்தின் தோலை நீக்குகின்றபோது ஐம்பது வீதமான உயிர்சத்து சியும், அத்தோடு அயனும், கல்சியமும் சேர்ந்தே அகற்றப்படுகின்றது. சமையல் செய்யும் போது வெப்பத்தினால் உயிர்சத்துக்கள் அழிக்கப்படுகின்றன. பாலை இரண்டு, மூன்று நிமிடங்கள் கொதிக்கவைத்தால் போதும் முப்பது வீதமான உயிர்சத்து பி 12 அழிக்கப்படுகின்றது. புரோக்களியை பத்து நிமிடம் சமைக்கும் போது எண்பத்தி இரண்டு வீதமான உயிர்ச்சத்து சி இழக்கின்றது.

தமிழர்களின் சமையல் முறையே நீண்ட நேரம் வேகவைப்பது என்பதால், நமது சமையல் முறையால் நாம் நிறைய உயிர்ச்சத்துகளை இழக்கின்றோம் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

சிகரெட் புகைப்பவர்கள் தமது உடலில் உள்ள உயிர்ச்சத்து சி யை இழந்து போகின்றார்கள். நமது குருதியில் உயிர்ச்சத்து சி உள்ளது. புகையை ஆனந்தமாக இழுத்து விடும் போது சுவாசப்பையை கணத்துக்கு கணம் கடந்து செல்கின்ற குருதியில் உள்ள உயிர்ச்சத்து சி சிகரெட்டினால் அழிக்கப்படுகின்றது. அதிகம் புகைப்பவர்கள் தினமும் ஐம்பது மில்லி கிராம் உயிர்ச்சத்து சி யை இழக்கின்றனர்.

மது அருந்துவதாலும் உயிர்ச்சத்து இழக்கப்படுகின்றது. உயிர்ச்சத்து பி 6 அபரிமிதமாகக் குறைகின்றது. அறுபது வீதமான உயிர்ச்சத்து ஏ குறைகின்றது. அத்தோடு எண்பத்தி இரண்டு வீதமான கனியுப்புக்கள் உடலில் இருந்து குறைந்து போகின்றன.

நாங்கள் பாவிக்கின்ற சில வகை மருந்து வகையாலும் நமது உடலில் உள்ள உயிர்ச்சத்துக்கள் அழிந்து போகின்றன.



நமது குருதியில் உள்ள கலோஸ்ரோலைக் குறைக்கப் பாவிக்கின்ற மாத்திரைகள், கொழுப்பில் கரையக்கூடிய உயிர்ச்சத்துக்களான ஏ,டி,கே யை குடலில் இருந்து குருதிக்குள் உறிஞ்சப்படுவதை தடை செய்கின்றன.

கருத்தடை மாத்திரைகள் உயிர்ச்சத்து டி, சி, மற்றும் பி 6 ஐ உடலில் இருந்து குறைக்கின்றன. அஸ்பிரின், அன்ரி பயாற்றிக்கும் உயிர்ச்சத்து கே, பி யை உடலில் இருந்து அழிக்கின்றது. உடல் நிறையைக் குறைக்கப் பாவிக்கும் டயற் மாத்திரைகளும் நமது உடலில் உள்ள உயிர்ச்சத்துகளையும், கனியுப்புகளையும் உடலை விட்டு வெளியேற்றிவிடுகின்றன.

உணவுப் பொருட்களில் இருந்து நமக்குத் தேவையான உயிர்ச்சத்துக்களையும், கனியுப்பு களையும் பெறுவதில் வேறு ஒரு சிக்கலும் உள்ளது.

நாள் ஒன்றுக்கு நமக்குத் தேவையான கல்சியத்தை நாம் பெற, கல்சியம் செறிந்து கிடக்கின்ற பாலை நாம் அருந்த வேண்டும். ஆனால் நாள் ஒன்றுக்கு நான்கு கோப்பை பால் குடிக்க வேண்டும்.

400 IU உயிர்ச்சத்து டி யை தினமும் பெறுவதற்கு நாம் ஐந்து இறாத்தல் கோதுமையை சாப்பிட்டாக வேண்டும். அல்லது எட்டுக் கோப்பை வாதாம் பருப்பை சாப்பிட வேண்டும். அல்லது 28 கோப்பை நிலக் கடலையை சாப்பிடவேண்டும். இது எல்லாம் முடியாது போனால் இரண்டு கலன் சோள எண்ணெய்யை கண்டிப்பாகக் குடிக்க வேண்டி வரலாம்.

தினமும் 360 மில்லி கிராம் உயிர்ச்சத்து சி யைப் பெற நான்கு கிளாஸ் தோடம்பழச்சாற்றைக் குடிக்க வேண்டும். நாள் ஒன்றுக்கு நமக்குத் தேவையான துத்தநாதத்தைப் ஐ பெற 41 முட்டைகளை நாம் சாப்பிட்டாகவேண்டும். உயிர்ச்சத்து பி 12 யை பெற்றுக்கொள்ள 113 பெரிய இறால்களையும், அயனைப் பெற்றுக் கொள்ள 6.9 இறாத்தல் மாட்டு இறைச்சியையும், மகனீசியத்தை பெறுவதற்கு 3.5 இறாத்தல் Green pea யையும் நாம் சாப்பிடவேண்டும்.

இந்தத் தகவல்களின் அடிப்படையில் நாம் தெரிந்து கொள்கின்ற விடயம் என்னவென்றால், நமது உடலுக்குத் தேவையான உயிர்ச்சத்துக் களையும், கனியுப்புகளையும் நாம் உண்ணுகின்ற உணவுகளில் இருந்து பெற்றுக் கொள்வது என்பது சாத்தியமற்றது.

அப்படியானால் என்ன செய்வது?

*நமக்குத் தேவையான உயிர்ச்சத்துக்கள் மற்றும் கனியுப்புக்களை நாம் மாத்திரைகள் மூலம் எடுப்பதே இன்றையக் காலத்துக்குப் பொருத்தமானது என்பது எனது அபிப்பிராயம்.*

*இதனால் உயிர்ச்சத்துக்கள், கனியுப்புக்களை மாத்திரைகளாக விற்பனை செய்யும் வியாபாரிகள் பெரும் இலாபம் அடைகின்றார்கள் என்பது ஒரு அபிப்பிராயம். அது உண்மைதான், அதில் எந்தவித சந்தேகமுமே கிடையாது.*

*இதே போலத்தான் சோப் (Soap) வியாபாரிகளும் நன்மை அடைகின்றார்கள். பற்பசை வியாபாரி களும் நன்மை அடைகின்றார்கள். தலை மயிரை துப்பரவு செய்ய நாம் பாவிக்கும் சம்போ (Sham poo) வியாபாரிகளும் பயன் அடைகின்றார்கள்.*

*நாம் இயற்கையாக நமது உடலையும், நமது பொருட்களையும் துப்பரவு செய்த காலம் போய் இன்று இந்த வியாபாரிகளின் பொருட்களை பாவித்தே துப்பரவு செய்கின்ற நிலைமை வந்துவிட்டது. வீட்டுக்குள் வாசனை வருவதற்கும், உடலில் இருந்து நறுமணம் வருவதற்கும் பணம் செலவழிக்க நாம் தயாராக உள்ளோம். இந்தப் பொருட்களை வாங்கும் போது நமக்கு எந்தக் கேள்வியும் எழுவதில்லை. இந்தப் பொருட்கள் நமக்குத் தேவையானது என்று நாம் தீர்மானித்து விட்டோம். வீட்டுக்கு வெளியே புல் வளர்க்கவும், அதற்காக மருந்து, உரம் என்று செலவழிக்கவும் தயாராக உள்ளோம். ஆனால் நாம் உயிர் வாழ்வதற்கும், நமது ஆயுளை கூட்டுவதற்காக வும், நோய்கள் வராமல் பாதுகாத்துக் கொள்வதற் காகவும், உயிர்ச்சத்துகளுக்கும், கனியுப்புகளுக்கு மென செலவு செய்ய மறுக்கின்றோம்.*

*விற்பனையில் உள்ள உயிர்ச்சத்து மற்றும் கனியுப்புகளில் எந்த மாத்திரை சிறந்தது என்பது பற்றி நீங்கள் கொஞ்சம் ஆராய்ந்து கொள்வது நல்லது. என்னால் சொல்லக் கூடியது ஒன்றுதான். எந்த விதமான செயற்கை இரசாயனப் பொருட்களும் பாவிக்கப்படாமல், இயற்கையான முறையில் உருவாக்கப்படும் பழங்கள், தாவரங்க ளில் இருந்து தயாரிக்கப்படும் உயிர்ச்சத்துகளும், கனியுப்புகளும் நமது உடலுக்கு சிறந்தன. குடற் தொகுதியில் இருந்து உறிஞ்சப்படும் அளவு மட்டுமல்ல, நமது உடலுக்கு தேவையற்ற வகையில் தீங்கு விளைவிப்பதிலும் இருந்தும் இந்த மாத்திரைகள் பாதுகாப்பானவை.*

*(முற்றும்)*


APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# “குழந்தைகளுடன் இருத்தல்” (Baby sitting) ஒரு பொறுப்பு வாய்ந்த வேலை

குழந்தைகளுடன் இருக்கும் (Baby sitting) வேலையை செய்ய விரும்புகிறவர்கள் இவ்வேலையை ஒரு மிகமுக்கியமான பொறுப்பு வாய்ந்த வேலையாக கருதவேண்டும். இப்பொறுப்பு என்பது அவர்கள் உடன் இருக்க விரும்பும் குழந்தைகளை பாதுகாப்பதும் தங்களது பாதுகாப்பை உறுதி செய்வதிலும் தங்கியுள்ளது.

குழந்தைகளுடன் இருத்தல் வேலையை முதன்முதலாக ஒரு குடும்பத்திற்கு செய்ய விரும்புகிறவர் அவ்வேலையை ஏற்கமுன்னர் பலவிடயங்களை கேட்டு அறிய வேண்டும்.

1. முதலாவதாக அந்த குடும்பத்தவர்கள் விபரத்தை (References) அவர்களுக்கு தெரிந்தவர்களிடம் இருந்து அறிய வேண்டும்.

2. பின்னர் தங்களுடன் இருக்கப்போகின்ற குழந்தைகளின் எண்ணிக்கை அவர்களது வயது, அவர்களது படுக்கை நேரம், சாப்பாடுகள், மருந்துகள் மற்றும் அவர்களது பழக்கவழக்கங்களை அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலரிடமிருந்து பெறவேண்டும்.

3. உங்களை குழந்தைகளுடன் இருக்க அழைத்தவர் உங்களிடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறார் என்பதை அறியவேண்டும்.

4. குழந்தைகளுடன் இருக்கப் போகும் இடத்தின் விலாசம், தொலைபேசி இலக்கம், எவ்வாறு அங்கு செல்வது குழந்தைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயர் என்பனவற்றையும் அறியவேண்டும்.

5. உங்கள் வீட்டிலிருந்து குழந்தைகளுடன் இருக்கப் போகும் இடத்திற்கு எவ்வாறு போய்வரலாம் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

பெற்றோர் தங்கள் குழந்தைகளுடன் இருக்கப் போகிறவர் மேற்கூறிய கேள்விகளை கேட்டால் அவர்களிடம் பெற்றோருக்கு கூடிய நம்பிக்கை ஏற்படும். பெற்றோர் இப்படியான கேள்விகள் கேட்பவர் தங்கள் குழந்தைகளை கவனமாகவும் மிகவும் கரிசனையுடன் பார்ப்பார் எனவும் நம்புகிறார்கள். பின்னர் ஒருவருக்கு குழந்தைகளுடன் இருக்கும் வேலை கிடைத்தால் அவர் என்ன செய்ய வேண்டும் என பார்ப்போம்.

1. முதலில் வேலையை பொறுப்பேற்க வேண்டிய நேரத்திற்கு முன்பாகவே தாங்கள் குழந்தையுடன் இருக்கப் போகும் இடத்திற்கு செல்லவேண்டும்.
2. பெற்றோர் அல்லது பாதுகாவலர் எங்கு செல்கிறார்கள், அவர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளலாம், அவர்கள் எப்போது திரும்பி வருவார்கள் என்பவற்றை கேட்டுப் பெற வேண்டும்.
3. அவர்களிடம் ஒரு அவசர தேவை என்றால் அயலவர்களை கூப்பிடலாமா என்பதை அறிய வேண்டும்.
4. குழந்தைகளுடன் இருக்க போகிறவர்களுக்கு முதலுதவி (First Aid) சிகிச்சை அளிக்கும் முறை தெரிந்திருந்தால் அது மிகவும் நல்லது.
5. பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் ஒரு அந்நியர் வந்தால் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று கேட்க வேண்டும். அவர்கள் வந்தால் வீட்டினுள் விடுங்கள் என்று அறிவுறுத்தியிராவிட்டால் நீங்கள் குழந்தைகளுடன் இருக்கும் நேரம் எந்த விருந்தினர்களோ அல்லது அந்நியர்கள் வந்தாலும் அவர்களை வீட்டிற்குள் அழைத்தல் கூடாது.
6. வீட்டிற்கு வரும் தொலைபேசி அழைப்புக்களை எடுக்குமாறு உங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதால் எக்காரணம் கொண்டும் தொலைபேசியில் மறுமுனையில் இருப்பவருக்கு நீங்கள் குழந்தைகளுடன் இருக்க வந்தவர் என்றோ அல்லது நீங்கள் தனியே அந்த வீட்டில் குழந்தைகளுடன் இருக்கிறீர்கள் என்றோ கூறுதல் கூடாது. அவர்களிடம் அவர் யாருடன் கதைக்க விரும்புகிறார் என்று கேட்டு அவர்களுக்கு கொடுக்க வேண்டிய செய்திகள் ஏதேனும் கூறினால் அவற்றை குறிப்பு எடுத்துக் கொண்டு விரைவில் அவர்கள் உங்களுக்கு பதில் தொலைபேசி எடுப்பார் என்று மட்டுமே கூற வேண்டும்.

7. வீட்டிற்கு வெளியால் சந்தேகப்படும் படியாக யாராவது நின்றால் அல்லது சத்தம் கேட்டால் அவற்றை பார்க்க வெளியே செல்லுதல் கூடாது. இரவு நேரம் ஆயின் வீட்டின் வெளிப்புற விளக்குகளை எரியச் செய்யலாம். வீட்டின் கதவு மற்றும் ஜன்னல்கள் வடிவாக மூடி இருக்கின்றதா என உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

8. பெற்றோர் அல்லது பாதுகாவலர் தேவை ஏற்படின் அயலவர்களை தொலைபேசியில் அழைக்கலாம் என்று கூறியிருந்தால் தவிர மற்றைய நேரங்களில் வீட்டிற்கு வெளியே யாராவது சந்தேகப்படும்படியாக உலாவினால் பொலீஸ் ஐ அழைக்கவும்.

9. அவசரதேவைக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலர் தாங்கள் செல்லும் இடத்திற்கு தொலைபேசியில் அழைக்குமாறு கூறி உங்களிடம் தொலைபேசி இலக்கம் தந்திருந்தால் அவர்களிடம் அந்த இலக்கத்திற்கு தொடர்பு கொள்ள முடியாவிட்டால் அடுத்ததாக யாரை எந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று கேட்டு குறித்துக் கொள்ளுங்கள்.



10. குழந்தைகளுடன் இருக்குமிடத்தில் ஏதாவது பாதுகாப்பு உபகரணங்கள் இருந்தால் (Fire extinguisher, First Aid Supplies) அதாவது நெருப்பு அணைக்கும் கருவி அல்லது முதல் உதவிப்பெட்டி இருந்தால் அவற்றை எவ்வாறு உபயோகிப்பது என்று கேட்டு அறிந்து கொள்ளவும்.

11. பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் வீடு முழுவதும் சுற்றிப் பார்க்கவும். இந்நேரம் நீங்கள் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் எல்லாம் பூட்டி இருக்கிறதா என்று கவனிப்பதோடு வீட்டிலிருந்து நெருப்பு போன்ற விபத்துகள் ஏற்பட்டால் வீட்டை விட்டு வெளியேறும் பாதைகள் எவை என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

12. தொலைபேசிக்கு அருகில் குறிப்பெடுக்க உதவும் தாள்கள், பென்சில், பேனா போன்றவை இருப்பதையும் உறுதி செய்து கொள்ளுங்கள். தொலைபேசிக்கு அருகில் அந்த வீட்டு விலாசத்தை தெளிவாக எழுதி வைத்து விடவும். ஒவ்வொரு வருடமும் ஒரு குழந்தை ஆவது குழந்தைகளுடன் இருப்பவர் கவனத்தை வேறு எங்காவது (தொலைபேசியில் கதைத்துக் கொண்டு இருக்கும் போது) செலுத்திக் கொண்டிருக்கும் போது விபத்திற்குள்ளாகி இறக்கின்றது. இவ் விபத்துக்கள் பெரும்பாலும் குழந்தை வழுக்கி வீட்டு நீச்சல் குளம், மலசல கூடம் (Toilet), குளிக்கும் தொட்டி (Bath tub) என்பவற்றில் ஒன்றில் விழுந்து விடுவதன் மூலம் நடைபெறுகின்றன.

குழந்தைகளுடன் இருப்பவர் தனது கவனத்தை வேறு எங்காவது செலுத்திக்கொண்டு இருக்கும்போது குழந்தைகள் அடுப்பில் இருக்கும் சூடான பாத்திரத்தை தட்டித் தங்கள் மீது கொட்டியும் விபத்துக்கள் நடந்துள்ளது.

குழந்தைகளுடன் இருப்பவர் கவனியாவிடத்து குழந்தைகள் தங்களது பெற்றோர் அல்லது பாதுகாவலர் இல்லாத சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நெருப்புப் பெட்டியுடன் விளையாடி தீவிபத்துக்களும் ஏற்பட்டிருக்கிறது.

குழந்தைகளுடன் இருப்பவரது முக்கியவேலை அவர்களுக்கு விபத்துகள் ஏற்படாது பாதுகாத்தல் வேண்டிய வசதிகளை (உணவு, நித்திரை) வழங்கி பராமரித்தல் ஆக இருந்தாலும் அவர்களுக்கு குழந்தைகளுடன் சேர்ந்து விளையாடவும் தெரியவேண்டும். ஒரு நல்ல குழந்தைகளுடன் இருப்பவர் என பெயர் பெறுவதற்கு அவருக்கு நன்றாக குழந்தைகளுடன் விளையாடவும் தெரிய வேண்டும்.

சிறிய குழந்தைகள் (Infants) தங்களது உடம்பின் ஆற்றலை அறிய ஆரம்பிக்கிறார்கள். அதனால் அவர்கள் பொருட்கள் எறிவதையும் (Throw), இறுக்கிப் பிடிப்பதையும் (Hold), தள்ளி விழுத்துவதையும் (Drop), கிழிப்பதையும் (Tear) மற்றும் உருளுவதையும் (Roll) விரும்புவார்கள். இவர்களுடன் விளையாடும் போது பின்வரும் ஆபத்துக்களை தவிர்க்க தயாராக இருக்க வேண்டும். இச் சிறிய குழந்தைகள் எதையும் வாயில் போட தயாராக இருப்பார்கள். இவர்களை சிறிய பொருட்கள் கூட இலகுவில் மூச்சுத் திணற (Smother) வைத்து விடும். இவர்கள் சிறிதளவு நீரிலும் மூழ்கிவிடுவார்கள்.

நடுத்தர குழந்தைகள் (Toddlers) எதையும் அறியும் அதீத ஆவல் உடையவர்கள். எதையும் அடித்து (Bang), தள்ளி(Push), இழுத்து (Pull) பார்க்க விரும்புவார்கள். துள்ளுவதும் (Jump), கீறுவதும் (Draw), நிறம் தீட்டுவதும் (Coloring) இவர்களுக்கு விரும்பமான செய்கையாகும்.

இவர்களுடன் விளையாடும் போது பின்வரும் ஆபத்துக்களை தவிர்க்க தயாராக இருக்க வேண்டும். இந் நடுத்தர குழந்தைகள் எதையும் வாயில் போட்டு விழுங்குவதற்கோ (Swallowing), தவறி விழுவதற்கே (Falling) ஏதுவான செய்கைகளை செய்ய முயற்சிப்பார்கள். நெருப்புப் பெட்டி, வீட்டை சூடாக்கும் கருவிகள் (heaters) வீட்டில் காணப்படும் நஞ்சுகள் (Poisons) மற்றும் சமையல் அடுப்புகள் (Stove) என்பவற்றுடன் விளையாடவும் தயாராக இருப்பார்கள்.

வளர்ந்த குழந்தைகள் (3வயதுக்கு மேற்பட்டவர்கள்) சுறுசுறுப்பான உடற்பயிற்சி சம்பந்தப்பட்ட விளையாட்டுக்களை விளையாட விரும்புவார்கள். இவர்கள் கைவேலை (Arts and Crafts), கட்டிடங்கள் கட்டி விளையாடுதல் (Building Blocks), ஓடிப்பிடித்து விளையாடுதல் (Physical Games) மற்றும் புத்தகங்கள் வாசிப்பதிலும் விருப்பம் உள்ளவர்களாக இருப்பார்கள்.

இவர்களுடன் விளையாடும் போது பின்வரும் ஆபத்துக்களை தவிர்க்க தயாராக இருக்க வேண்டும். இவ் வளர்ந்த குழந்தைகள் வீதிக்கு ஓடுவதற்கு தயங்கமாட்டார்கள். தவறி விழுவதற்கான வேலைகளையோ (Falling) நெருப்பு சம்பந்தப்பட்ட வேலைகளையோ ( Heaters & Stove) செய்வதற்கு இவர்கள் தயங்கமாட்டார்கள்.

ஒரு வீட்டிற்கு குழந்தைகளுடன் இருப்பதற்கு செல்பவர் தான் போகும் போதே தன்னுடன் குறிப்புப் புத்தகம் (Note book) சஞ்சிகைகள், (Magazines) நிறத்தாள்கள் (Colour papers) ஒட்ட உதவும் நாடா (Tape) பலநிற தடித்த முனை எழுதுகருவிகள் (Marker) போன்றவற்றை எடுத்துச் சென்றால் அவர்கள் குழந்தைகளை திகைக்க வைப்பதுடன் (Surprise) குழந்தைகளுக்கு இலகுவில் விளையாட்டு காட்டி தங்களது வேலை நேரத்தை சுலபமாக கழிப்பார்கள். இதைவிட குழந்தைகளும் சந்தோசமாக தங்களது பொழுதை கழிப்பார்கள்.

குழந்தைகளுடன் இருப்பவர் ஒருபோதும் குழந்தைகளை தனியே விட்டு விட்டு எங்கும் செல்லக்கூடாது. குழந்தையின் மேல் இருக்கும் கவனத்தை சிறிது நேரம் விலக்கிக் கொண்டால் அந்த சிறிது நேரமே அவர்களுக்கு எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட போதிய நேரமாக அமைந்து விடும்.

குழந்தைகள் விளையாடும் இடத்தில் அசையக்கூடிய சூடாக்கும் கருவிகள் (Portable Heaters), திரைச்சீலையை (curtain)

தொடர்ச்சி 12ம் பக்கம்


## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்




Kanthan: 416.291.3997





• No Spraying • No Smelling • No Moving

## ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880


# Secret Swami

கடவுள், இறைவன், தெய்வம் என்பன வெல்லாம் மனிதசக்திக்கு அப்பாற் பட்டவையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும் யாரைக் கடவுள் என்பது யாரைத் தெய்வம் என்பது என்று முடிவு செய்வதெல்லாம் ஒவ்வொருவரது நம்பிக்கையையும் விருப்பு வெறுப்புகளை யும் பொறுத்ததொன்றாகும். யார் என்ன முடிவு எடுக்கிறார்கள் என்பதுபற்றியோ அது சரியா பிழையா என்று ஆராய்வதோ இந்தப்பகுதியின் நோக்கமல்ல.

## சாதாரண மனிதனின் பார்வையிலிருந்து

காங்கேசன்துறையில் ஆனந்தப் பிள்ளையார் கோவில், பொழுது போக்காக அம்மம்மாவுடன் போக ஆரம்பித்தகோவில் இறைவன் மீது அபார நம்பிக்கையையும், அவர்மீது பயமும் உண்டாகவும் அதனால் வாழ்க்கையை சரியான வழியில் அமைத்துக்கொள்ள ஆதாரமாக அடி எடுத்துக்கொடுத்தது. இறைவன் இருப்பது உண்மையா, பொய்யா என்று ஆராய்ச்சிகளில் இறங்கியது கிடையாது. இறைவன் என்றால் என்ன என்று தத்துவங்கள் பேசவும், மற்றவர்களுக்கு புத்திமதி சொல்லவும், ஏன் மற்றவர்களை மதமாற்றம் செய்யவும் கூட முயன்றது கிடையாது. கிறிஸ்தவ கோயில்களையும், பள்ளிவாசல்களை யும் கண்டால் கூட கையெடுத்துக் கும்பிட்டோ அல்லது மனதிற்குள் இறைவா என்று நினைத்துக் கொள்ள வைத்ததும் அந்த ஆனந்தப் பிள்ளையார் என்றே எண்ணிக் கொள்கிறேன். மனிதனை மனிதனாக பார்க்கவும் அன்பினால் உலகையும் வெல்லலாம் என்பதையும், நம்பிக்கை வைத்து பிள்ளையார்தான் சொல்லிக் கொடுத்து நடத்திச் செல்கின்றார் என்ற நம்பிக்கையுடன் வாழும் போது, மதம் மாற வேண்டும் என்றோ போதனைகள் கேட்டு இறைவனை தொழும் வழியினை மாற்றிக் கொள்ளவோ அல்லது பஜனைகள், யாத்திரைகள் என்று மற்றவர்களை பார்த்து பின் செல்ல எண்ணியதோ, நடந்ததோ கிடையாது. நம்பிக்கை வைத்த இறைவன் நல்லபடியாக நல்லவனாக வாழ நல்ல மனத்திடத்தினையும், மனக்கட்டுப் பாட்டையும் கொடுத்து இருக்கின்றான்.

கொழும்பில் வாழ்ந்து வந்த எனது ஒரு பாட்டனார் யாழ்ப்பாணம் வரும் காலங்களில் எல்லோரும் போல கோவில்களுக்கு சென்றாலும், யோகர் சுவாமிகள் என்றொருவர் பற்றி மிக்க பக்தி சிரத்தையுடன் கதைகள் பல சொல்லுவார். அவரது சித்துவேலைகள் அருள்வாக்குகள் என்று சிறுவனாக இருந்த எனக்கு அவரைப்பார்க்க வேண்டும் என்ற ஆவல் வரும் அளவிற்கு யோகர் சுவாமிகள் பற்றிய கதைகள் இருக்கும். சிறுவனாக இருந்த என்னை அவரிடம் அழைத்துப் போகும்படி கேட்டால் நீ குழப்படி செய்கிறவன் அப்படிப்பட்டவர்களை அவர் அடித்து விடுவார் என்று பாட்டா பயம் காட்டி விடுவார். நாம் செய்யும் குழப்படிகளை தெரிந்து அடி போடும் சுவாமிகளை விட கல்லாக இருந்து அருள் செய்யும் பிள்ளையாரே மேல் என்று எண்ணிக் கொள்வதுண்டு. எனது பாட்டா போன்று பல வயது முதிர்ந்த பெரியவர்கள் யோகர் சுவாமிகள் பற்றிய உயர்வான கதைகள் பல கூறக் கேள்விப்பட்டிருந்தும் அவரை போய் பார்க்க வேண்டும் என்ற உந்துதல் ஒரு போதும் மனதில் எழுந்ததில்லை. ஏனெனில் வணங்கும் தெய்வம் மனதுக்கு நிறைவாக இருந்ததால் வேறு இடங்களை மனம் நாடவில்லை.



06


எழுபதுகளில் யாழ்ப்பாணம் போகும் காலங்களில் யாழ்.கச்சேரி அருகில் ஒரு வைத்தியரின் வீடு பஜனைகள், பூசைகளால் சில நாட்களில் பரபரப்பாக இருக்கும். பணவசதி படைத்தவர்கள் மிடுக்காக தமது கார்களில் வந்திறங்கி பக்தி சிரத்தையுடன் உள்ளே போய் பங்கு பற்றுவதை பார்த்து விசாரித்த போது சாயிபாபா பஜனை என்று பாபா பற்றி அறிய வந்தது. அவரது உருவப் படத்தை பார்த்தபோது மேற்கத்தைய பாணியில் சிகையலங்காரம் செய்து காவி உடையில் காட்சி அளித்தாலும் முகத்தில் ஓர் ஒளியை அவதானிக்கக் கூடியதாகத் தான் இருந்தது. யோகர் சுவாமிகளைப்பற்றி எனது பாட்டனார் சொல்லக் கேள்விப்பட்டும் நாட்டம் உண்டாகாத இடத்தில், பணம் படைத்தவர்கள், வசதி உள்ளவர்கள் மாத்திரமே வணங்கும் ஒருவரை வணங்க வேண்டும் என்ற எண்ணம் மனதில் எழவில்லை. காலப்போக்கில் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் மேல்தட்டு மக்கள் மத்தியிலேயே பாபா பிரபலமாகி இருந்ததனாலும், இந்தியா சென்று தன்னை தரிசிக்கும் வசதி படைத்தவர்களுக்கு, தங்கச் சங்கிலி களும், மோதிரங்களும், கடிகாரப் பரிசுகளும் தனது அருளினால் எடுத்துக் கொடுக்கின்றார் என்று கேள்விப்பட்ட போது, மனதில் பல கேள்விகளும் எழத்தான் செய்தது. ஆனாலும் சந்தேகமோ அவநம்பிக்கைகளோ உண்டாகவுமில்லை, மனம் நாடவு மில்லை. எழுபதுகளில் மேற்படிப்பிற் காக இங்கிலாந்து சென்ற போதும் பாபா பற்றிய பூஜைகள், பஜனைகள் பற்றி அவ்வளவாக இலங்கையில் நடப்பது போல காணக் கிடைப்பதில்லை. ஆனால் 83 கலவரத்தின் பின்பு தமிழ் மக்கள் நாடோடிகளாக மாறத் தொடங்கியதும் மதம் மாறுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்ததுடன், பாபா பூஜைகள், பஜனைகள் அதிகரிக்கவும் செய்தன. இலங்கையில் வாழ்ந்த காலங்களில் பணக்காரர்களின் தெய்வ மாக மனதில் பாபா பற்றி பதிந்து விட்டதனால், அதிகரித்து வந்த பக்தர் கூட்டம் பாபா மேல் உண்மை பக்தி கொண்டு வணங்குகிறார்களா? அல்லது தம்மை மேல் தட்டு வர்க்கம் என்று உயர்த்திக் கொள்ள வணங்குகிறார் களா? என்று எண்ணவும் தூண்டியது. எது எப்படியாக இருந்தபோதும் மக்களை சில மணி நேரமாவது இறைவன்மீது நம்பிக்கை வரவும் நல்ல வழியில் மக்கள் நடக்கும் வண்ணம் மக்களை வழி நடத்திச் சென்றதனால் பாபா மீது ஒரு மதிப்பும் உருவாக செய்தது. ஆனால் பாபாவே தெய்வமாக மக்கள் கொண்டாடியதன் காரணம் சரிவர விளங்கவில்லை. ஆனால் அது ஒரு தவறான விடயம் என்று சொல்லவும் மனம் இடம் கொடுக்கவில்லை. ஏனெனில் மற்றவர்க ளின் உணர்வுகளை மதிக்க வேண்டும் அவர்களின் நம்பிக்கையை நாம் போற்றவேண்டும்.

இதற்கிடையில் இந்தியாவில் இருந்து பல சுவாமிமார்கள் தோன்றினார்கள். ரவிசுவாமி என்று இலங்கையிலும் பின்பு பிரேமானந்தா என்ற பெயரில் இந்தியாவிலும் பிரபலமாக இருந்த ஒருவரை பலர் தலையில் தூக்கி வைத்து கொண்டாடவும் செய்தார்கள். இறுதியில் தில்லு முல்லுகள் முதலாக கொலைகள் கற்பழிப்புக்கள் என்று பல அவதூறுகளுக்காக இன்று அவர் கம்பி எண்ணி வருகின்றார். நீண்டகாலமாக தமிழ் நாட்டின் சைவர்களின் புனித தலமாக இருந்த காஞ்சி மடத்தின் பெயரையும், நம்பிக்கை வைத்திருந்த பல்லாயிரக்கணக்கானவர்களின் மனங் களையும் பாழடிக்கும் வகையில் நடந்து கொண்ட காஞ்சிமடத்தின் பீடாதிபதி இன்று கொலை, வழக்கு, வம்புகளில் மாட்டி முழித்தவண்ணம் இருக்கின்றார். இப்படிப்பட்ட சுவாமிமார் கள் எல்லோரும் மனிதர்களாக மதிக்கப்படா மல் தெய்வங்களாக தூக்கி தலையில் வைத்து மக்கள் கொண்டாடுவது தான் அவர்கள் அராஜகம் புரிய வசதியாக இருக்கின்றது. மிகமோசமான வகை யில் ஊழல் செய்து ஆட்சியில் இருக்கும் அரசியல் வாதிகளின் ஆதரவும் இந்த சுவாமிமார்களுக்கு இருப்பது அவர்கள் செய்யும் தில்லு முல்லுகளுக்கு உறுதுணை செய்கிறது.

சென்றவாரம் CBC தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட Secret Swami என்ற விவரணச் சித்திரம் பல இலட்சம் மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமான சாயிபாபாவின் புட்டப்பர்த்தி திருத்தலத் தில் 90களில் நடைபெற்ற பாலுறவு தொடர்பான கொலைகள் சம்பந்தப்பட்ட விடயங்களை துப்புத்துலக்கி BBC தொலைக்காட்சியின் நிருபர் ஒருவர் சாயிபாபாவின் பக்தர்களாக இருந்தவர் களையும் இருப்பவர்களையும் சந்தித்து உண்மை தேட முயன்றதாக சொல்லப் படுகின்றது. அதில் அமெரிக்க காக்கேஷன் இனத்தவரான Alan Rahm என்பர் 70களில் பாபாவின் பக்தனாகி பின்பு தனது மனைவி Marisa வையும் மகன் Alaya வையும் பாபாவின் பக்தி மார்க்கத்தில் செல்ல வைத்தும் எப்படிப் பாதிக்கப்பட்டார்கள் என்ற கதைகளும் சொல்லப்படுகிறது. அதேவேளை பாபா விபூதி முதலாக விலையுயர்ந்த பரிசுகளை எவ்வாறு கொடுக்கின்றார் என்பதை, முன்பு இலங்கையில் இருந்த டாக்டர் கோவூர் பாணியில் விளங்கப்படுத்தப்படுகின்றது. இந்தியாவின் பிரபலமான எழுத்தாளர் குஷ்வத்சிங்கின் பார்வையில் பாபாவை மக்கள் எந்தளவிற்கு ஏற்றுக் கொண்டு இருக்கின்றார்கள் என்பதையும், பாபா ஏழை மக்களுக்கு ஆற்றி உள்ள நல்ல பணிகளில் கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில் துறைகளில் எந்தளவிற்கு சேவைசெய்கின்றார் என்பது பற்றியும் சொல்லப்பட்டு இருக்கின்றது. வட அமெரிக்காவின் கோடீஸ்வரர்களில் ஒருவராகிய Isac Tigret என்பவர் பிரபலமான Hard Rock Cafe யின் உரிமையாளர். பாபா புட்டபர்த்தியில் கட்டியுள்ள நவீன வசதிகளுடன் கூடிய வைத்தியசாலைக்கு பல மில்லியன் டொலர்களை அன்பளிப்பாக வழங்கிய வர், Dr. Michael Goldstein என்ற வைத்தியர் பாபாவின் சர்வதே அமைப்பிற்கு பொறுப்பாக உள்ளவர், முன்னைய இந்திய மத்திய அமைச்சர் ஒருவர் என்பவர்களுடன் சந்திப்பு என்பன போன்றவையே அந்த Secret Swami விவரணத்தில் இடம் பெற்றிருந்தது.

பாபா மீது கூறப்பட்ட குற்றங்கள் முறையீடாகவே காணப்பட்டன. அவை ஆதாரங்களுடன் காட்டப்படக் கூடிய விடயங்களும் அல்ல. பாபா மீது வேண்டுமென்றே குற்றம் சுமத்த வேண் டும் என்று Rahm குடும்பத்தினர் நடந்து கொள்வதாகவும் தெரியவில்லை. ஏமாற்றம் அவர்கள் பேச்சில் எதிரொலித் தது. ஒரு இந்திய அரசியல்வாதி எந்தள விற்கு தான் என்ற திமிர் பிடித்த வர் என்பதை நிரூபிக்கும் வகையில் அந்த முன்னை நாள் மந்திரி நடந்து கொண்ட

தொடர்ச்சி 17ம் பக்கம்



உங்கள் பிள்ளைச் செல்வங்களுக்கு எமது தாய் மண்ணுடன் ஒரு தொடர்பினை ஏற்படுத்த அல்லது உங்கள் ஓய்வு காலத்தை அங்கு இன்பமாகக் களித்திட இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் வீடு நிலங்களில் முதலிட எண்ணுகிறீர்களா?
நம்பிக்கையுடன் தொடர்பு கொள்ளுங்கள்

பரம்ஜி - 416.230.1107

PARAM. G GNANASWARAN
Sales Representative

HOME LIFE GTA REALTY INC.
1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON

416.321.6969
905.670.9969
(Mississauga)
paramg@themathuram.com

# விளையாட்டுச் செய்திகள்

## முரளிக்கு ஒரு ஓ... போடு!!

முத்தையா முரளிதரனின் அபாரமான சுழற்பந்து வீச்சில் சிக்கி இரண்டாவது ரெஸ்ற் துடுப்பாட்டப் போட்டியிலும் மேற்கு இந்தியத் தீவுகள் தோல்வி அடைந்தது. முரளிதரன் மிக அபாரமாக பந்து வீசி, மேற்கு இந்தியத் தீவுகளின் இரண்டாவது இன்னிங்ஸில் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதனால் 378 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆடிய மேற்கு இந்தியத் தீவுகள் அணி 137 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து 240 ஓட்ட வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.




இதன் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட இத் தொடரை சிறிலங்கா 2 - 0 என்ற கணக்கில் வென்றது. சிறிலங்கா, மேற்கு இந்தியத் தீவுகள் அணிகளுக்கு இடையேயான இரண்டாவது ரெஸ்ற் போட்டி கண்டியில் நடைபெற்று வருகிறது. நாலாவது நாளான திங்கட் கிழமை தேநீர் இடைவேளைக்கு முன் பாகவே இலங்கை சுலபமாக வென்றது.

பத்து முன்னணி வீரர்கள் இல்லாத நிலையில், இளம் வீரர்களுடன் களமிறங்கிய மேற்கு இந்தியத் தீவுகள், முரளிதரனின் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தொடர்ந்து பெவிலியன் திரும்பினர். 41.2 ஓவர்களில் 137 ஓட்டங்களை மட்டுமே எடுத்து அனைத்து விக்கெட்டுக்களையும் மேற்கு இந்தியத் தீவுகள் இழந்தது. அணியில் அதி கபட்சமாக தியோ நாராயன் 29 ஓட்டங்களும், ராம்தின் 28 ஓட்டங்களும் எடுத்தனர். அணித்தலைவர் சந்திரபால் 24 ஓட்டங்களையும், ராமதாஸ் 23 ஓட்டங்களும் எடுத்தனர்.

மற்றவர்கள் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர். இந்த நான்கு வீரர்களும் 20 ஓட்டங்களைக் கடந்த போதும், மறுமுனையில் தொடர்ந்து துடுப்புக்கள் வீழ்ந்ததால், அணியின் புள்ளிவிவரத்தை உயர்த்த முடியாமல் திணறினர். 33 வயதாகும் முரளிதரன் இப் போட்டியில் 14-வது முறையாக பத்து விக்கெட்டுக்களை வீழ்த்தினார். முதல் இன்னிங்ஸில் அவர் இரண்டு விக் கெட்டுக்களை வீழ்த்தினார். உடல்நிலை சரியில்லாமல் 11 மாதங்கள் போட்டி களில் விளையாடாமல் இருந்த அவர், 93 ரெஸ்ற்களில் 549 விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளார். இதன் மூலம் ரெஸ்ற் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியோர் பட்டியலில் தொடர்ந்து இரண்டாவது இடத்தில் உள்ளார்.

அவுஸ்திரேலியாவின் ஷேன் வார்னே 124 போட்டிகளில் 589 விக்கெட்டுக்களுடன் முதல் இடத்தில் உள்ளார். கடந்த மூன்று நாட்களாக மழையின் குறுக்கீடு காரணமாக ஆட்டம் பாதிக்கப்பட்டது. நான்காவது நாளான திங்கட்கிழமையும் மழை மேகங்கள் சூழ்ந்திருந்தன. ஆனால் மழை பெய்யவில்லை. இருப் பினும் ஆட்டம் 45 நிமிடங்கள் தாமதமாக தொடங்கின.

**எஸ். கணேஷ்**

சங்கக்கரா: முன்னதாக ஏழு விக்கெட்டு இழப்புக்கு 340 ஓட்டங்கள் என்ற நிலையில், இலங்கை தனது இரண்டாவது இன்னிங்ஸை திங்கட் கிழமை தொடங்கியது. ரெஸ்ற் போட்டி களில் தனது எட்டாவது சதத்தை அடித்த சங்கக்கரா, 157 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்காமல் இருந்தார்.

பெஸ்ட்க்கு தடை: பந்தை அதிக உயரத்துக்கு வீசியதாக மேற்கு இந்தியத் தீவுகளின் டினோ பெஸ்ட் தொடர்ந்து பந்து வீச நடுவர் தடை விதித்தார். ஞாயிற்றுக்கிழமை மட்டை யாளரின் தோளுக்கு மேல் எழும்பும் வகையில் பந்து வீசியதால் பெஸ்ட் எச்சரிக்கப்பட்டார். திங்கட்கிழமை ஹொராத்தின் தோளுக்கு மேல் பந்து வீசியதற்காக பெஸ்ட் தொடர்ந்து பந்து வீசத் தடை விதித்தார் நியூஸிலாந்து நடுவர் டோனி ஹில்.

கொழும்பில் நடைபெற்ற முதல் ரெஸ்ற் போட்டியில் இலங்கை ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

சுருக்கமான புள்ளிவிபரம் : இலங்கை - முதல் இன்னிங்ஸ் - 150 ஓட்டங்கள். மேற்கு இந்தியத் தீவுகள் - முதல் இன்னிங்ஸ் - 148. இலங்கை - இரண்டாவது இன்னிங்ஸ் - ஏழு விக்கெட்டு இழப்புக்கு 375 ஓட்டங்கள் டிக்ளேர் (சங்கக்காரா 157 ஆட்ட மிழக்காமல்). மேற்கு இந்தியத் தீவுகள் - இரண்டாவது இன்னிங்ஸ் - அனைத்து விக்கெட் இழப்புக்கு 137 ஓட்டங்கள் (முரளிதரன் எட்டு விக்கெட்டு).

### இரண்டு புதுமுகங்கள்

சிறிலங்காவில் வரும் 30ஆம் திகதி முதல் நடைபெறும் முத்தரப்பு ஒருதின துடுப்பாட்ட போட்டியில் பங்கேற்கும் சிறிலங்கா அணியில் இரண்டு புது வீரர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இடது கை தொடக்க வீரர் உபுல் தாரங்கா (20), ஆல்ரவுண்டர் தில்ஹாரா லோகு ஹெடிகே (25) ஆகியோர் 15 பேர் கொண்ட அணியில் இடம்பெற்றுள்ளனர். மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக தற்போது நடைபெற்று முடிந்த தொடரில் இடம்பெறாத வேகப்பந்து வீச்சாளர் தில்ஹாரா ஃபெர்னாண்டோவும் அணியில் இடம்பெற்றுள்ளார். இந்தியா வுடன் எதிர்வரும் 30ஆம் திகதி தம்புலாவில் முதல் ஆட்டத்தில் இலங்கை விளையாடுகிறது. இது பகலிரவு ஆட்டம். முத்தரப்பு தொடரில் நான்கு ஆட்டங்கள் தம்புலாவிலும், இறுதி ஆட்டம் உள்பட மூன்று ஆட்டங்கள் கொழும்பு பிரேமதாஸா மைதானத்திலும் நடைபெற உள்ளன. இறுதி ஆட்டம் ஒகஸ்ட் ஒன்பதாம் திகதி நடைபெறுகிறது.

இலங்கை அணி விபரம் : மறவன் அட்டப்பட்டு (அணித்தலைவர்), மஹேல ஜயவர்தனே, சனத் ஜயசூர்யா, குமார் சங்கக்காரா, உபுல் தாரங்கா, திலகரத்னே தில்ஷான், ரஸ்ஸல் அர்னால்டு, சமிந்த வாஸ், உபுல் சந்தனா, முத்தையா முரளிதரன், நூவான் ஜோய்சா, தில்ஹாரா லோகுஹெடிகே, தில்ஹாரா ஃபெர்னாண்டோ, ஃபர்வீஸ் மஹ்ரூப், லசித் மலிங்கா.

### வாஸ் விளையாடுவது சந்தேகம்

இலங்கையில் 30ஆம் திகதி முதல் நடைபெறும் முத்தரப்பு போட்டியில் அந் நாட்டு அணியின் முக்கிய பந்துவீச்சாளர் சமிந்த வாஸ் விளையாடுவது சந்தேகம் எனத் தெரியவந்துள்ளது.

மேற்கு இந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் துடுப்பாட்டம் செய்த போது, காலில் ஏற்பட்ட தசைபிடிப்பு காரணமாக பதிலிவீரரை (By Runner) ஓடுவதற்கு அவர் வைத்திருந்தார். "காலில் அவருக்கு ஏற்பட்டுள்ள தசைபிடிப்பு காரணமாக ஏழு முதல் பத்து தினங்கள் வரை அவர் ஓய்வு எடுக்க வேண்டியிருக்கலாம்" என அணியின் உடலியக்க நிபுணர் கிளார்க் தெரிவித்துள்ளார். குறைந்த பட்சம் இந்தியாவுக்கு எதிரான ஆட்டத்தில் (யூலை 30) அவர் விளையாட முடியாது எனத் தெரிகிறது. மேற்கு இந்தியத் தீவுகளின் முதல் இன்னிங்ஸில் 22 ஓட்டங்களைக் கொடுத்து வாஸ் ஆறு விக்கெட்டுகளைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது.

### கடும் எதிர்ப்பையும் மீறி நியூஸிலாந்து அணி சிம்பாபே பயணம்

கடும் எதிர்ப்புக்கு இடையே நியூஸிலாந்து துடுப்பாட்ட அணி சிம்பாவேக்கு பயணம் மேற்கொண்டுள்ளது. நியூஸிலாந்து துடுப் பாட்ட அணி வெலிங்டனிலிருந்து புறப்பட்டது. நமீபியா செல்லும் நியூஸிலாந்து அணி அங்கு பயிற்சி ஆட்டங்களில் விளையாடுகிறது. சிம்பாவே துடுப்பாட்ட அணியுடன் இரண்டு ரெஸ்ற் போட்டிகளில் நியூஸிலாந்து விளையாடுகிறது. இந்த ஆட்டங்கள் ஒகஸ்ட் நான்காம் திகதி தொடங்குகின்றன. பின்னர், இவ்விரு அணிகளுடன் இந்தியாவும் பங்கேற்கும் முத்தரப்பு துடுப்பாட்ட போட்டி நடைபெறுகிறது.



கடும் எதிர்ப்பு : சிம்பாவேயில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதைக் கண்டித்து, நியூஸிலாந்து அணி அங்கு செல்லக்கூடாது என்று எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இதற்காக சட்டம் இயற்றும்படியும் பல்வேறு கட்சிகள், அமைப்புக்கள் கூறின. ஆனால் சட்டத்தை கொண்டு வர நியூஸிலாந்து அரசு மறுத்துவிட்டது. சர்வதே துடுப்பாட்ட கவுன்சில் அட்டவணைப்படி இப்போட்டி நடைபெறுகிறது. இப்போட்டியிலிருந்து விலகினால், சிம்பாவே துடுப்பாட்ட வாரியத்துக்கு ரூ. 90 கோடியை நியூஸிலாந்து தர வேண்டியிருக்கும். அதைத் தவிர போட்டியை நடத்துவதால் கிடைக்கும் வருமான இழப்பையும் ஈடுசெய்ய வேண்டியிருக்கும். இது தொடர்பாக நியூஸிலாந்தில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், பெரும்பாலான மக்கள் நியூஸிலாந்து அணி சுற்றுப்பயணம் மேற்கொள்ள ஆதரவு அளித்துள்ளனர்.








# புதிய ஆதனம் வாங்கும் விற்கும் பத்திரத்தில் ஒப்பமிடும்....

## தொடர் - 211

## நாமும் நமது இல்லமும்

### ராஜா மகேந்திரன்

ஆதனங்களின் விலை குறையலாம் என்ற சொல்லே, எல்லோரும் முணுமுணுத்துக் கொண்டு இருக்கும் இந்த காலத்தில், யூன் 2005, வீட்டு விற்பனையில் மற்றுமொரு சாதனை மாதமாக பதியப்பட்டு விட்டது. இதுவரையுள்ள யூன் மாதங்களில் 2005யூன், இரண்டாவது, அதிகூடிய ஆதனங்கள் கைமாறிய மாதமாக மாறியுள்ளது. மொத்தமாக 9,153 வீடுகள் வீட்டு முகவர்களால் விற்று, வாங்கி கொடுக்கப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை ஆகக்கூடியதாகப் பதியப்பட்ட யூன் 2005 ஐ விட 122 வீடுகளே குறைவாகக் காணப்படுகின்றது. (யூன் 2005 இல் கைமாறிய வீடுகள் 9275 ஆகும். மேலும் இன்னுமொரு தகவல், இதுவரை ரொறொன்ரோ ஆதனம் விற்று வாங்கும் சபையின் பதிவிலே 6 தடவை கள் மட்டுமே 9000 இற்கு மேற்பட்ட தடவைகளே ஆதனங்கள் கை மாறியுள்ளன.

ஆதனத்தின் விலையை கணக்கில் எடுக்கும்போது யூன் 2004 உடன் ஒப்பிடும்போது விலை அதிகரித்துள்ளது. இருந்தும் மே 2005 உடன் ஒப்பிடும்போது யூன் 2005 இல் விலையில் சிறிதளவு இறக்கம் ஏற்பட்டுள்ளது.

- யூன் 2005 இல் சராசரி வீட்டு விலை $ 345,065
- யூன் 2004 இல் சராசரி வீட்டு விலை $ 316,510
- மே 2005 இல் சராசரி வீட்டு விலை $ 346,474

இந்த விலையின் இலக்கங்களை உற்று நோக்கும்போது, கடந்த வருடத்தில் உள்ள வீட்டின் விலையிற்கும் இந்த வருட யூன் மாதத்தில் உள்ள விலையில் ஏறக்குறைய 9% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களில் இது ஒரு பெரிய அதிகரிப்பாகவே தோன்றுகின்றது. ஆதனம் சம்பந்தப்பட்ட அறிஞர்களின் எதிர்வு கூற்றின்படி, மத்திய வங்கி விரைவில் வட்டி வீதத்தை அதிகரிக்க இருப்பதாகவும், இந்த



அதிகரிப்பு குறைந்த முதலீட்டுடன் (0%, 5% அல்லது 10%) வீடு வாங்கியவர்களிற்கு கஷ்டத்தை கொடுக்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்கள்.

2006 வருட இறுதிக்குள், வட்டிவீதம் தற்போது இருக்கும் வட்டி வீதத்தை விட ஆகக் குறைந்தது 1% ஆகக் கூடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது மத்தியவங்கியின் இன்றைய வட்டிவீதம் 4.25% இலிருந்து 5.25% இற்கு அதிகரிக்கலாம். அல்லது அதனைவிட கூடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. அண்மையில் இலண்டனில் அல்லது கெய்ரோவில் நடந்த மாதிரியான சம்பவங்கள் நடக்காமல் இருந்தால் வட்டி வீதம் நிச்சயம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கலாம். இன்றைய கால கட்டத்தில் Variable Rate Mortgage அல்லது Closed Mortgage சிறந்தது, என்றால் பொதுவாக பதில் சொல்வது கடினம். இது தனிப்பட்டவர்களின் பொருளாதார நிலைமையில் தங்கியுள்ளது. பெரிய அளவில் அடமானக் கடனை வைத்திருக்கும் ஒருவர் 1% வட்டிவீத அதிகரிப்பு பெரிய பளுவைக் கொடுக்கும். ஆனால் Variable Rate Mortgage இப்பொழுது 3.5% அல்லது அதனை விட குறைவாக உள்ளது. (4.25% - 0.75% அல்லது more) இதனால் மாதாந்த சேகரிப்பு அதிகமாக உள்ளது.

ஆனால் 5 வருடத்திற்குரிய Closed Mortgage குறைந்தது 1.5% அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே Variable Rate Mortgage இல் வைத்திருப்பதால் மாதாந்த சேகரிப்பு அதிகம். வட்டி அதிகரிப்பை சமாளிக்கலாம் என நினைப்பவர்களிற்கு Variable Rate Mortgage நல்லதாக இருக்கும். தகுந்த ஆதனமுகவர், அடமான முகவருடன் கலந்தாலோசித்து முடிவு எடுப்பது நல்லது.




WEB CREATION

**அதிக செலவில்லாமல் சிறப்பான இணைய தளத்தை உங்கள் வியாபாரத்துக்கு என அமைக்க வேண்டுமா? இலவச ஆலோசனை பெற இன்றே, இப்போதே அழையுங்கள்** M. Karthik

தொலைபேசி எண் - 647 519 0623





MORNINGSIDE & SHEPPARD

Detached 2 storey
3 + 1 bedrooms
Hard wood floor

JANE / MAJOR MCKENZE

Brand new detached 2 storey
9' Ceiling, Uptgrades. 2600 SFT, Hardwood floor

3 bedrooms
4 washrooms


$474,800

WESTNEY & HWY 2

Detached 2 storey
3 + 1 bedrooms
Hard wood floor

$329,000

Warden/Lawrence


Free Standing building
Central Location
Industrial Building
Truck Level, Drive thru

$1,200,000

MCCOWAN & LAWRENCE

Detached Bungalow
3 + 1 bedrooms walkout, sep. entrance, mostly upgraded windows.

Condo. For Sale

Kennedy & Eglington
2 bedrooms, Corner unit. small complex
Close to kennedy subway

HOMELIFE
HIGHER STANDARDS

Raja Mahendran, P.Eng.
Broker/Owner
Cell: 416.315.9397
Off : 416.321.6969




# நாடகத்தின் தனித்துவம்

*கடந்த இதழ் தொடர்ச்சி - 5*

திரைப்படங்களிலும் தொலைக்காட்சி நாடகங்களி லும் இல்லாத இயல்புகள் சில நாடகத்தில் இருக்கின்றன. அவற்றுள் பார்வையாளர் மிகவும் விரும்புவதொன்று நடிகர்களின் ஆற்றுகையை (performance) நேராகவே கண்டு மகிழ்தல். விளையாட்டுப் போட்டிகளில் விளையாட்டு வீரர்களின் வெற்றிகளையும் தோல்விகளையும் நேரடியாகவே பார்த்து அனுபவிக்கும் இன்பசுகம் நாடகத்திலும் உண்டு. நாடகங்களின் முடிவில் நடிகர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களைப் பார்வையாளர் கண்டு பேசுகின்ற, பாராட்டுகின்ற அல்லது குறைநிறைகள் பற்றிய கருத்துக்களைப் பரிமாறுகின்ற வாய்ப்புக்களும் இருக்கின்றன.

**கவிஞர் வி. கந்தவனம்**

திரைப்படத்திற் செயற்கைத் தன்மைகள் அதிகம். பாடற் காட்சிகள் போன்றவற்றால் கதையோட்டத்தில் விறுவிறுப்பும் குறைந்துவிடுகிறது. இது முக்கியமாகத் தமிழ்ப் படங்களிற் காணப்படும் ஒரு குறைபாடாகும். நாடகங்களில் தேவையற்ற காட்சிகள் இருப்பதில்லை. விறுவிறுப்பாகக் கதை நகர்த்தப்படும் பாங்கைப் பார்வையாளர் விரும்புகின்றனர்.

திரைப்படத்தில் கதையும் காட்சிக் களங்களும் எங்கோ நடப்பதைப்போன்ற உணர்வே மேலிடும். நாடகத்தில் கதை எங்கோ நடைபெறுவதாக இருந்தாலும் களம் பார்வையாளர் முன்னே உள்ளதால் சம்பவங்கள் தமக்குமுன் நடைபெறுவதுபோன்ற உணர்வும் கால இடப்பரிமாணங்களுடன் தாமும் ஐக்கியப்படும் அனுபவமும் பார்வையாளருக்கு ஏற்படுகின்றது.

எம். ஆர். ராதாவின் 'இரத்தக் கண்ணீர்' நாடகத்தை 25, 30 தடவைகள் பார்த்தவர்களும் இருக்கிறார்கள். ஏனெனில் நாளுக்கு நாள் அவர் வசனங்களை மாற்றி மாற்றிப் பேசுவார். இந்தக் கவர்ச்சி திரைப்படத்தில் இல்லை.

இவ்வித வித்தியாசமான அனுபவங்களை விரும்பும் பார்வையாளர்களால் நாடகக் கலை வாழ்ந்துகொண்டிருக்கிறது. எல்லா நாடுகளிலுமே நாடகத்தைப் பார்ப்பதற்கென்று ஒரு கூட்டம் இருக்கின்றது. எனினும் இந்தக் கூட்டத்தை நம்பி நாடகக் கலைஞர்கள் வாழ்க்கை நடத்த முடியாது இடர்ப்பட்ட சம்பவங்கள் அனேகம்.

நடிகர் திலகம் டாக்டர் சிவாஜி கணேசன் தனது சுயசரிதையில் நாடக நடிகராகத் தானும் சக நடிகர்களும் பட்ட இன்னல்களை ஒரு கட்டத்தில் (பக். 54-55) இப்படி விவரிக்கின்றார்:

"கொல்லங்கோடு மகாராஜா ஒரு பெரிய கலா ரசிகர். தினமும் நாடகத்துக்கு வந்து, என்னை மிகவும் பாராட்டுவார். ஒரு நாள் எனக்குப் பெரிய வெள்ளித்தட்டு ஒன்றைப் பரிசாகக் கொடுத்தார். ஒரு நான்கு, ஐந்து அடி இருக்கும் அந்தத் தட்டு. 'அந்த வெள்ளித்தட்டை இப்போது காண்பியுங்கள்' என்று கேட்டுவிடாதீர்கள்.

ஏனென்றால் அதை அப்பொழுதே விற்றுத் தீர்த்துவிட்டார்கள் எங்கள் முதலாளிகள். அவ்வளவு கஷ்டம் எங்களுக்கு. சாப்பாட்டிற்கே பணம் இல்லாதபோது, வெள்ளித்தட்டை விற்கும்படியாகிவிட்டது. எனக்கு வெள்ளித் தட்டை விற்றது பற்றிக் கவலையில்லை. எனக்குப் பரிசாகக் கிடைத்த வெள்ளித்தட்டை விற்றதினால், நூறு பேர் நான்கு நாட்கள் சாப்பிட்டார்கள். அந்தத் திருப்திதான் எனக்கு பெரிதாக இருக்கிறது.

அந்த நாளில் 'நாடக வாழ்க்கை ஒரு வழுக்கு மரம் ஏறுவது மாதிரி.' மேலே ஏறுவது வழுக்கிக் கீழே வருவது. இது எங்களுக்கு சகஜம். உறியடித் திருவிழாவில் வழுக்கு மரம் ஏறுவதும் அப்படித்தானே. மறுபடியும் எங்களுக்குக் கஷ்டம் வந்தவிட்டது. அப்போது நாடகத்தையே நிறுத்தும்படியாக வந்துவிட்டது. நாடகத்தை நிறுத்திவிட்டார்கள். ஒரு மாத காலமாக நாடகமும் நடக்கவில்லை சாப்பாட்டுக்கு என்ன செய்வது?

ஊரைச் சுற்றி, வயல்காட்டில் தோட்டத்து பகுதியில் சேனைக் கிழங்கு விளைந்திருக்கும். அவற்றையெல்லாம் தோண்டி எடுத்து, வேக வைத்து, உப்புப் போட்டுச் சாப்பிட்டோம். சாப்பாடு இல்லை. சேனைக் கிழங்கை உப்புப் போட்டு சாப்பிடுகிற நிலைமை எங்களுக்கு. கொஞ்சம் யோசனை செய்து பாருங்கள். எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பேன் என்று."



இது சரஸ்வதி கானசபா நடிகர்களின் அன்றைய நிலைமை. அக்காலத்தில் பிரபலியமாக இருந்த நவாப் ராஜமாணிக்கம் பிள்ளையின் கம்பெனி நடிகர்களும் பெரும் வருவாய் பெற்றார்கள் என்று சொல்வதற்கில்லை. நாடகம் போதிய வருவாய் தராத தொழிலாக இருந்ததாற் போலும் அதனை ஆத்தாதவன் செய்யுந் தொழில் என்றனர் தமிழர். ஆத்தாதவன் - வேறு நல்ல தொழில்களை ஆற்ற முடியாதவன். அதனாலும் திரைப்பட வளர்ச்சியினாலும் படிப்படியாகப் பல நாடக சபாக்கள் மூடப்பட்டன.

உண்மையிற் பல சிறுபான்மைச் சமுதாயங்களில் இக்காலத்தில் நாடகம் பொழுதுபோக்காவே நடத்தப்பட்டு வருகிறது.

### பார்வையாளரைக் கவர்தல்

பொருளாதார வசதி மிகுந்த மேலைநாடுகளிலும் தொழில்ரீதியாக இயங்கும் பல நாடக அமைப்புகள் மக்கள் ஆதரவின்றி இயங்க முடியாது தத்தளித்து வருகின்றன. பார்வையாளர்களைக் கவர்வதற்குப் பலவிதமான உத்திகளை அவை நடைமுறைப்படுத்தியும் வருகின்றன.

அவற்றுட் சில பின்வருமாறு:

1. நுழைவுச்சீட்டு விலைகளைக் குறைத்தல். குடும்பமாக வருகின்றவர்களுக்குச் சலுகைகள் அளித்தல்.
2. குழந்தைப் பராமரிப்பு வசதிகளை வழங்குதல்.
3. போதிய வாகனத் தரிப்பிடங்களை ஏற்படுத்துதல்.
4. சிற்றுண்டி மற்றும் உணவு வகைகளைப் பார்வையாளர் வாங்கக்கூடிய ஒழுங்குகளைச் செய்தல் அல்லது கடைகளை நடத்துதல்.
5. பருவச்சீட்டு முறையாற் சலுகைகளை அளித்தல். அவற்றுள் விரும்பிய நாளில் நாடகத்தைப் பார்க்கக்கூடிய வசதி ஒன்று. முன் ஆசனங்களை அவர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்தல் மற்றொன்று. பழக்கமானவர் ஒன்றாக இருந்து பார்க்க விரும்பின் அதற்கேற்ற வகையில் ஆசனங்களை வழங்குதலும் உண்டு.
6. சில இடங்களில் நுழைவுச்சீட்டுகள் விற்கப்படாமல் விரும்பிய நன்கொடைகள் வழங்கலாம் என்ற அறிவித்தலுடன் நாடகங்கள் நடத்தப்பட்டும் இருக்கின்றன.


நுழைவுச்சீட்டு விலை அதிகம் என்பதற்காக நாடகத்தைப் பார்க்காமல் இருப்பவர்களையும் பணத்தைக் கொடுத்துத் தமது கொள்கைக்கு எதிரான, எதிர்பார்ப்புகளுக்கு மாறான நாடகங்களைப் பார்க்கவேண்டியிருக்கிறதே என்று குறை கூறியும் விமர்சனம் செய்தும் நாடகத்தைப் புறக்கணிப்பவர்களையும் கவரும்பொருட்டு நன்கொடைமுறை

அறிமுகப்படுத்தப்பட்டது. நாடகத்தை விரும்பிக் கொண்டவர் நன்கொடை வழங்குவர். பணம் படைத்தவர் நுழைவுச்சீட்டு விலையிலும் பன்மடங்கு அதிகமாகவும் வழங்குதல் கூடும். விரும்பாதவரையும் குறைவாகவேனும் நன்கொடைகளைக் கொடுக்க அவை நாகரிகம் தூண்டும்.



7. வார இறுதியில் அல்லது விடுமுறைக் காலத்தில் நாடகத்தை ஆடுதல். இக்காலத்தில் இது

தொடர்ச்சி 17ம் பக்கம்



# தலித் படும் பாடு - 4


இந்த ஐம்பது வருட கால ஆட்சியில், கழகங்கள் 35 வருட காலம் ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள். அறுபது வருடகாலம் பெரிய அரசியல் கட்சியாக இருந்து வந்துள்ளார்கள். ஆயினும், தாழ்த்தப்பட்டோர் உயர் ஜாதி இந்து வகுப்பினரால் கொடுமைப் படுத்தப்பட்டு வருவது, எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் தொடர்ந்து வருகிறது. இவை எல்லாம் ஒரு கலவரமாக, சட்ட ஒழுங்கு நடவடிக்கையாகத்தான் பார்க்கப்பட்டு வந்துள்ளதே அல்லாது, சாதிக் கலவரம் என்றோ, தீவிரப்பட்டு வரும் உயர்ஜாதி இந்துக்களின் சாதிவெறி என்றோ அங்கீகரிக்கப்படவில்லை.

இதற்கான ஒரு பெரிய காரணம், கள்ளர், தேவர் போன்ற இடைச் சாதி மக்கள், இவர்களிடம் அரசோ, கழகங்களோ ஏதும் கேள்வி கேட்டு விட முடியாது. ஒன்று இவர்களது எதிர்ப்பு வன்முறையிலேயே வெளிப்படும். இதை கழக உறுப்பினர்கள் தாங்கிக் கொள்ள மாட்டார்கள். கழக உறுப்பினர்கள் பலவீனமான எதிரியிடம் தான் தம் வன்முறையைப் பிரயோகிப்பார்கள். இது கழகப் போராட்ட வரலாறு முழுதும் சாட்சியம் அளிக்கும். ஆனால் இந்த இடைச்சாதி மக்களின் சாதி வெறியையும் வன்முறையையும் எதிர்க்கும் எண்ணமே கழகங்களுக்கு இருந்ததில்லை. ஏனெனில் அவர்களது சாதி ஒழிப்பு பார்ப்பனர்களை எதிர்க்கத்தான். அத்தோடு வரம்பு கட்டப்பட்ட ஒன்று. இரண்டாவது, அத்தகைய மனிதாபிமானம் தழுவிய சாதி எதிர்ப்பு, அவர்கள் பிரக்ஞையில் இருக்குமானால் அதற்கு அவர்களும் கட்டுப்பட வேண்டும். அவர்கள் அதற்குத் தயாரில்லை. பார்ப்பான் கீழிறக்கப்படவேண்டும். அவன் இருக்கும் படியில் தாம் அமர வேண்டும். தான் இருக்கும் படியில் தனக்குக் கீழிருப்பவன் வந்துவிடுவதில், அவனுக்கு சமதையான இடம் கொடுப்பதில் இவர்களுக்கு சம்மதமில்லை. கடைசியும் மிக முக்கியமுமான காரணம், இந்த ஜாதி இந்துக்களின் வாக்குகளை இழக்க எந்த கட்சியும் தயாராயில்லை.

## வெங்கட் சாமிநாதன்

இந்த அடிப்படையான புரிதலை, எல்லோரும் பகிர்ந்து மௌனம் சாதிக்கும் சதி என்று தான் சொல்ல வேண்டும். ஏனெனில், இன்று அரசைக் கைப்பற்றியிருப்பவர்கள், சாதி ஒழிப்புதான் தம் லட்சியம் என்று சொல்லிக் கொண்டாலும், தம் சாதி மேலாண்மையை ஒரு இம்மி அளவு கூட தளர்த்திக் கொள்ள விரும்பாத, இடைச் சாதி, (இவர்கள் தம்மை பிற்பட்டவர், மிகவும் பிற்பட்டவர் என்று சாதி அங்கீகாரம் பெற்றவர்கள், அந்த அங்கீகாரம் தரும் சலுகைகளை அனுபவிப்பதற்காக) வகுப்புகளைச் சேர்ந்தவர்கள். இதில் தாழ்த்தப்பட்டோர் இடம் பெற முடியாது. தாழ்த்தப்பட்ட மக்களின் கட்சிகளான விடுதலைச் சிறுத்தைகளுக்கும், புதிய தமிழகத்துக்கும் எந்த கழகமும் எந்த மரியாதையும் கொடுத்தது கிடையாது. கூட்டணியில் இடம் கொடுத்ததும் கிடையாது. இதில் இன்னொரு வேடிக்கை, இவ்விரு கட்சிகளும் தலைவர்களும் தாழ்த்தப்பட்ட சாதியினரானாலும், மற்ற உயர் சாதி கூட்டமைப்புகள் இவர்களை அங்கீகரிக்க மறுத்தாலும், இவர்களிடையேயும் சாதி வேறுபாடுகள் உண்டு. ஒருவர் இன்னொருவரை அங்கீகரிக்கமாட்டார்கள். ஒன்று சேர மறுப்பார்கள். தாழ்த்தப்பட்டவர்களிடையே கூட சாதிவாரியான ஏற்றத்தாழ்வுகள் நிறைய உண்டு. ஒரு தாழ்த்தப்பட்ட சாதியினர் மற்ற தாழ்த்தப்பட்ட சாதியினரை சமமாக மதிக்கமாட்டார்கள். இது ஒன்றிரண்டு அல்ல. எண்ணற்றவை. இந்த சாதிப் பெருமையை எவ்வளவு பரிதாபகரமான வாழ் நிலையிலும், எந்த இடத்திலும் இவர்கள் கைவிடமாட்டார்கள்.

இடையில் ஒரு சுவாரஸ்யமான நிகழ்ச்சியைச் சொல்லலாமென்று தோன்றுகிறது. தில்லியில் எனது நண்பர், நாடக இயக்குனர், பெண்ணேஸ்வரன், தன் ஒரு நாடக மேடையேற்றத்திற்காக, நாட்டுப்புற வாத்தியங்கள்:



பறை, உறுமி போன்றவை, வாசிப்பவர்கள் தென்னாட்டிலிருந்து பிழைப்பிற்காக தில்லி வந்தவர்களில் இருப்பதாகத் தெரிந்து அவர்கள் இருப்பிடம் தேடிச் சென்றார். ஒரு குடிநீர் விநியோக இடத்தில் இயக்குனராக இருக்கும் (pump house operator) தன் கிராமத்தவர் இவ்வாத்தியம் வாசிப்பவர் அவரின் இருப்பிடம் தெரிந்து அவர் மூலம் மற்றவர்களையும் பிடிக்கலாம் என்று அவர் வசிப்பதாகச் சொல்லப்பட்ட நகரத்திலிருந்து வெகு தூரம் ஒதுக்கியுள்ள குடிசைப்பகுதிகளில் ஒன்றுக்குச் சென்றார். அக்குடிசைப்பகுதி ஒரு பெரிய கிராமம் போல கிட்டத்தட்ட ஓராயிரத்துக்கும் மேற்பட்ட குடிசைகளைக் கொண்டது. இவர் விசாரணையின் ஆரம்பத்திலேயே அவர்கள் எல்லோரும் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் தான் எனினும் அதில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் அச் சேரிக்குள்ளேயே அவர்கள் ஒவ்வொரு வகுப்பினரும் தனித்தனி வகுப்பினராக மற்றவரிடமிருந்து ஒதுங்கியே தத்தமது வகுப்பு எல்லைகளுக்குள் வாழ்ந்தனர் என்றும் ஒரு வகுப்பினர் மற்றவருடன் எவ்வித உறவும் வைத்துக் கொள்வதில்லை என்பதும் தெரிந்தது.

என் நண்பருக்குச் சொல்லப்பட்டது, "அவரு எங்க ஆள் இல்லைங்க. அவரு வேறெ சாதி, நாங்க வேறெங்க. அவங்க ஆளுங்களெல்லாம், வேறெ இடத்திலே குடிசை போட்டிட்டு இருக்காங்க. நாங்க அங்கெல்லாம் போய்க் கிறதில்லீங்க." என்று சொன்னவர் தன் வீட்டுப் பையன் ஒருவனை, நண்பருக்கு வழிகாண்பிக்க அனுப்பி வைத்தார். அந்த பையன் நண்பர் தேடும் நபரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று, "இந்த வீடு தாங்க" என்று சொல்லி வெளியில் நின்று கொண்டான்.

குடிசைக்குள்ளிருந்து வந்த ஆள், நண்பரைக் கண்டதும், "வாங்க" என்று வரவேற்று ஒரு கயிற்றுக் கட்டிலைகொண்டு வந்து வெளியே கிடத்தினார், எல்லோரும் உட்கார. வழிகாட்டிய பையன் உட்காரவில்லை. நின்றுகொண்டே இருந்தான்.

"தண்ணி குடிக்கிறீங்களா?" என்று வரவேற்று தண்ணீர் கொண்டு வந்தார். தேடி அலைந்த களைப்பைப் பார்த்தவர் அவர். பெண்ணேஸ்வரன் தண்ணீர் குடித்தார். வழி காட்டிய பையன் தண்ணீரை மறுத்து விட்டான். "அவங்க வேறே ஜாதிங்க. எங்க கிட்ட வரமாட்டங்க, தண்ணிகூட குடிக்க மாட்டங்க" என்று விளக்கம் அளிக்கப்பட்டது. இது நடப்பது தில்லியில்.

பிழைக்க வந்து இன்னொரு சேரி வாழ்க்கையில், தீவிரமாக கடைபிடிக்கப்படும் சாதி உணர்வுகள், தாழ்த்தப்பட்ட மக்களிடையே. இவர்கள் கொடுத்த தண்ணீரைத் தயக்கமின்றி பருகிய என் நண்பர், தமிழ் நாட்டில் பிறந்து தமிழ் பேசி, தில்லியில் தமிழ் நாடக மேடையேற்றத்திற்காக தன் பணத்தையும் நேரத்தையும் செலவிடும் கன்னட பிராமணர். தமிழ் நாட்டு அரசியலில், அவர் சாதி வெறி பிடித்த பார்ப்பான் என்று வசை பாடப்படும் மக்களைச் சார்ந்தவர். தில்லிச் சேரியில் தம் சாதி உணர்வுகளை எந்த இக்கட்டிலும் கட்டிக் காக்கும் அந்த வேறுபட்ட வகுப்புகளைச் சார்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள், திராவிட கட்சிகளின் அரசியல் பானையில், பார்ப்பனீய சாதிக்கொடுமையில் இரண்டாயிரம் ஆண்டுகளாக வதைபடும் தலித்துகள்.

இது ஏன்? இது எங்கு ஆரம்பித்தது? பகுத்தறிவுத் தந்தையின் பார்ப்பன துவேசத்தில் பிறந்தது. அப்படிச் சொல்ல வெட்கப்பட்டு, சாதி ஒழிப்பு என்று பெயர் சூட்டப்பட்டது. பார்ப்பனனைத் தவிர வேறு எந்த சாதி உணர்வு பற்றியும் அவர் கவலைப்பட்டதில்லை.

இனி அவரது பொன்மொழிகள் மாதிரிக்கு சில :

"பார்ப்பனன் இந்த நாட்டிலிருந்து விரட்டப்பட வேண்டும் (விடுதலை 29.1.54)

"எவ்வளவு பகுத்தறிவு வாதிகளாய். நாத்திகர் களாய் இருந்தாலும், பார்ப்பானனை உள்ளே (கழகத்தினுள்) விடக்கூடாது. சேர்க்கக் கூடாது (விடுதலை 20.10.67)

"கடவுளை ஒழிக்க வேண்டுமானால் பார்ப்பனனை ஒழிக்க வேண்டும் (விடுதலை 9.10.58)

"சாதி பாகுபாடுகளை ஒழிப்பதற்கு அரசியல் சட்டம், காந்தியார், நேரு படத்தைக் கொளுத்த வேண்டும். இவ்வத்தனை முயற்சிகளிலும் பலன் கிட்டாமல் தோல்வி கிடைக்குமானால், பிறகு பார்ப்பனர்களை அடிக்கவும், உதைக்கவும், கொல்லவும், அவர்கள் வீடுகளைக் கொளுத்தவுமான காரியங்கள் நடைபெறவேண்டும்". (நூல்:தமிழர் தலைவர்)

இம்மாதிரி வேண்டாம், இதைவிட சற்று குறைந்த டிகிரி கோபத்தோடாவது கண்டனங்கள், போராட்டங்கள், சாதி ஒழிப்பு பற்றியோ சாதி இந்துக்களின் சாதி வெறி, கலவரங்கள், கொலைகள், தீ வைப்புகள் பற்றி பகுத்தறிவுத் தந்தை பெரியார் ஒரு வார்த்தை சொன்னதாக ஏதும் சாட்சியம் கிடையாது. தாழ்த்தப்பட்ட மக்கள் பற்றி அவர் கூறியுள்ளவை சில பதிவாகியுள்ளன. அவற்றில் மாதிரிக்கு சில:

'தீண்டாமை விலக்கு என்பதும், கோவில் பிரவேசம் என்பதும் சூத்திரனை அவனினும் தாழ்த்தப்பட்டவருடன் சேர்ப்பது தானா? இந்த அனுமதியானது இதுவரை நடுசாதியாக இருந்த சூத்திரர் என்பவர்களை இப்போது தாழ்த்தப்பட்டவர்களாக மாற்றி விட்டது. அதனால் நாம் இதை அனுமதிக்கக் கூடாது': (பெரியார் கூற்று: ஆதாரம் வீரமயின் வைக்கம் போராட்ட வரலாறு)

ஒரு முறை ஈ.வே.ரா. விலை ஏறிவிட்டதற்குக் காரணம் இப்போது தாழ்த்தப் பட்ட இனப்பெண்கள் எல்லாம் ரவிக்கை போடு வது தான். வேலை இல்லாத் திண்டாட்டம் அதி-கரிப்பதற்குக் காரணம் தாழ்த்தப்பட்ட இனத்தவரெல்லாம் படித்துவிட்டது தான் என்று கூறினார். அதற்கு அன்று மறுப்பு கூறினோம். (அம்பேத்கார் மாத இதழ் - நவம்பர்-டிசம்பர், 1963)


"வட ஆற்காடு பசுமந்தூரில் 1948-ம் ஆண்டு ஜுன் மாதத்தில் நடைபெற்ற திராவிட கூட்டமொன்றில் பெரியார் பேசிய போது, ஒருவர் ஆதி திராவிடர், திராவிட கழகத்தில் சேருவதால் ஆதி திராவிடருக்கு என்ன நன்மை? என்று கேட்டார். இதற்கு பதிலாக பெரியார், "ஆதி திராவிடர் திராவிட கழகத்தில் சேருவதால், திராவிட கழகத்திற்குத் தான் என்ன நன்மை" என்று எதிர் கேள்வி கேட்டார்.

(நூல்: கோலார் தங்க வயல் வரலாறு: கே.எஸ்.தாரமான்

மேற்சொன்னவையெல்லாம், ம. வெங்கடேசனின் "ஈ. வே. ராமசாமி நாயக்கரின் மறுபக்கம்" என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவை. ம. வெங்கடேசனும் ஒரு தலித். இதை வெளியிட்டது உசிலம்பட்டி முன்னேற்றக்கழகம் (Forward Bloc.) இந்த இரண்டு காரணங்களும் அவரை இதுகாறும் கால் கை இழக்காது பத்திரமாக வைத்துள்ளன. முதலில் அவர் இருக்குமிடமே என்னால் கண்டு பிடிக்கமுடியவில்லை. எளிதில் யாரும் கண்டுபிடிக்க முடியாதபடி தான் அவர் வாழ்கிறார் என்று தோன்றுகிறது.

கடைசியாக முது பெரும் அரசியல் வாதியும், அகில இந்திய தளத்தில் இயங்கியவருமான எல். இளையபெருமாளின் பவழ விழாவை ஒட்டி வெளியிடப்பட்ட அவரது பேட்டி பதிவிலிருந்து சில வரிகளோடு முடிக்கிறேன்.

"திராவிட இனத்தாரால், திராவிட இயக்கத்தால் நமக்கு விடுதலை கிடைக்கவே கிடைக்காது. ஆரியர்கள் நம்மை மறைமுகமாகத்தான் ஒடுக்குகிறார்கள். ஆனால், திராவிட இனம் தான் நம்மை நேரடியாக இருந்து அழித்துக் கொண்டிருக்கிறது" (ப.45)



"சமூகத்தில் இழிதொழிலாக இருக்கின்ற இந்தத் தொழில்களை ஒழிப்பதற்கு அரசியல் வாதிகள்

தொடர்ச்சி 18ம் பக்கம்


SAMI DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $75.00


Summer Daycare - $60 with food & Everything
தினசரி நடவடிக்கைகள் * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா.

#7 Birchcrest Court (Finch / Warden) Mrs.S.J. சௌந்தரநாயகம் 416-502-3033



*The Mortgage Alliance company of Canada*





**வீடு வாங்குவது நீங்கள்**
**பணம் ஒழுங்கு செய்வது நான்**

*உங்கள் இல்லத்தை 5% முற்பணத்துடன் கொள்வனவு செய்வதற்கு வங்கி வட்டி வீதத்தைவிட குறைவாக வீடு மற்றும் வியாபார 1ஆவது, 2ஆவது, 3ஆவது அடமான கடன் பெற நாடுங்கள் - காந்தன்*

Tel.: 416.291.3997
Cell: 416.895.4283

குறைந்தவட்டி நிறைந்த பலன்

மேலைத் தேசத்தில்
கீழைத் தேசத்து வாசனைகள்...

Niru BRAND®

**எமது புதிய அறிமுகங்கள்**




Improted & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

**NIRU(EUROPE) LTD.**
Unit 11, Mitcham Insustrial Estate,
85, Streatham Road, Mitcham
Surrey, CR4 2AP. U.K
Tel: +44 208 640 8228
Fax: +44 208 640 8312

# காப்புறுதி நட்டஈட்டு நிவாரண கொடுப்பனவு

காப்புறுதி நிறுவனம் ஒன்று வங்குரோத்து **(Bankruptcy or insolvent)** நிலைமைக்கு சென்றால் ஒப்பந்தம் வைத்திருப்பவரின் கதி என்னவாகும் என்ற பீதி ஒன்று பொதுவாக பலருக்கும் இருப்பது வழமையாகும். அதற்கு தீர்வு என்ன?

இத்தகைய நிலைமை ஏற்படலாம் என்ற அச்சத்திற்கு தீர்வு காண்பதற்காகவே கனடிய சட்ட விதிகளினால் உருவாக்கப்பட்ட நிறுவனமே "Canadian Life & Health Insurance Compensation Corporation" ஆகும். அதனை சுருக்கமாக 'com corp" என குறிப்பிடப்படுவது உண்டு. இதில் கனடாவில் சகல ஆயுள் காப்புறுதி நிறுவனங்களும் அங்கம் வகிக்கின்றன. கம்பனியின் "வங்குரோத்து நிலைமை" என்பதில் பாதிக்கப்படும் ஒவ்வொரு தனி வாடிக்கையாளருக்கும் பின்வரும் தொகைகளில் உத்தரவாதத்தினை இவ் அரச நிறுவனம் நம்பிக்கையுடன் வழங்குகின்றது.

1. உயிர் இழப்பு நட்டஈடு என்பது ஒவ்வொரு ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்திற்கும் 200,000 இலட்சம் வரையாகும்.

2. காப்புறுதி கம்பனிகளில் உள்ள சேமிப்புகள், அல்லது ஆயுள் காப்புறுதி ஒப்பந்தத்துடன் சேர்ந்துள்ள சேமிப்புக்களுக்கு ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கு $60,000 டொலர் வரையாகும்.

3. பதிவு செய்யப்பட்ட ஓய்வூதிய திட்டங்களுக்கு ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கு (RRSP) $60,000 டொலர் வரையாகும்.

4. உடல் இயலாமையால் மாதாந்தம் பெறும் நட்ட ஈடுகளுக்கு (Disability benefit, மாதம் $2000 டொலர் வரையாகும்.

5. உடல் நோய் மருத்துவ காப்புறுதிகளுக்கு (Health benefits) $60,000 வரையாகும் இந்நிறுவனம் தொடர்பாகவும் வாடிக்கையாளர் பாதுகாப்பு தொடர்பாகவும் விவரங்களை பெற அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம் 1-800-268-8099 ஆகும்.


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


எனவே கனடாவில் ஆயுள் காப்புறுதி ஒப்பந்தம் வைத்திருக்கும் எவரும் இந்த விடயத்தில் எந்த சந்தர்ப்பத்திலும் அச்சம் கொள்ள தேவை இல்லாத அளவுக்கு பாதுகாப்பு உள்ளது.

அது தவிர மத்திய, மாகாண நித அமைச்சு சகல கனடாவின் காப்புறுதி கம்பனிகளையும் பரிசீலனை செய்து கண்காணித்து வருவதுடன், இத்தகைய வழியில் கம்பனி ஒன்று வீழ்ச்சியடைந்து கொண்டு போனால் வாடிக்கையாளர் எவரும் பாதிக்காமல் இருக்க ஒப்பந்தங்களை அதே விலையில், விதிகள் எதுவும் மாறாது இன்னொரு கம்பனிக்கு மாற்றி விடுவது வழமையாகும்.

## கனடாவில் இயங்கும் காப்புறுதி நிறுவனங்களில் கனடிய அரசின் கண் காணிப்பு என்பது எப்படி இருக்கும்?

கனடாவில் காப்புறுதி நிறுவனங்களின் செயல் பாட்டுக்கான அனுமதிப்பத்திரத்தினை (License) மத்திய, மாகாண அரசுகள் வழங்குவதால் மத்திய அரசின் அனுமதிப்பத்திரத்தினை பெற்ற காப்புறுதி நிறுவனம், மாகாண அரசின் அனுமதிப்பத்திரத்தினை பெற்ற காப்புறுதி நிறுவனம் என இவ் அனுமதி வழங்கலில் இருவகைகள் அடங்குகின்றன. அனேகமான காப்புறுதி நிறுவனங்கள் மத்திய அரசின் அனுமதிபத்திரத்தினை பெற்ற காப்புறுதி நிறுவனங்கள் ஆகும். மத்திய அரசின் அனுமதிப்பத்திரத்தினை பெற்ற காப்புறுதி நிறுவனங்கள் ஒவ்வொன்றும் கனடாவின் ஒவ்வொரு மாகாணத்திலும் செயல்படுவதற்கும் அந்த மாகாண அரசின் சட்ட பூர்வமான அனுமதிப்பத்திரத்தினை அந்த மாகாண அரசின் காப்புறுதி சட்ட விதிகளுக்கு அமைய பெற்று இருக்க வேண்டியது என்பது முக்கியமானதாகும். இங்கு கியூபெக் மாகாண அரசின் காப்புறுதி சட்ட விதிகள் என்பது ஏனைய மாகாண அரசுகளின் காப்புறுதி சட்ட விதிகளுடன் அனுசரித்து போனாலும் பல இடங்களில் சற்று வேறுபடுகின்றது.

கனடாவின் மத்திய அரசு, மாகாண அரசின் காப்புறுதி சட்ட விதிகளுக்கு அமைய இந்நிறுவனங்கள் பூரணமாக இயங்கி கொண்டுள்ளதா? என்பதனை ஒவ்வொரு மாகாணத்திலும் நிதி அமைச்சின் கீழ் இயங்கும் "Superintendent of Insurance" என்னும் பிரிவின் கண்காணித்து கொண்டேயிருப்பார்கள். இப் பிரிவினர் ஒவ்வொரு காப்புறுதி நிறுவனங்களினாலும் சந்தைப்படுத்தப்படுகின்ற ஒப்பந்தங்களின் தன்மைகள், விலை விவரங்கள் யாவற்றினையும் பரிசீலனை செய்து அவற்றினை சந்தைப்படுத்துவதற்கு உரிய அங்கீகாரத்தினை வழங்குவதுடன், வருடம் தோறும் காப்புறுதி நிறுவனங்களினால் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்ட அறிக்கைகள், இலாப நட்ட கணக்குகள், கம்பனியின் சொத்துகள், பொறுப்புகள் என்பவற்றினை பரிசீலனை செய்து, ஒவ்வொரு நிறுவனத்தின் வலிமையினையும் கண்காணித்துக் கொண்டேயிருப்பார்கள்.

1992 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மத்திய அரசின் காப்புறுதி சட்ட திருத்தத்தின்படி ஒரு காப்புறுதி நிறுவனம் வங்குரோத்து நிலைமைக்கு சென்று, அதில் வாடிக்கையாளர் ஒருவர் பாதிக்கப்படுபவராக இருந்தால் அதற்கு அரசு பொறுப்பு என சட்டம் உருவாக்கப்பட்டதுடன், அதே சட்ட மூலத்தினை பின்னர் மாகாண அரசுகளும் உருவாக்கி நிரந்தர சட்டமூலம் ஆக மாற்றியுள்ளது. இவ்வாறு எத்தகைய வழியிலும் நிறுவனத்தின் வங்குரோத்து இயலாமையினால் வாடிக்கையாளர் ஒருவர் பாதிக்கப்படாது பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டதே.

"Canadian Life & Health Insurance Compensation Corporation" ஆகும். இந்நிறுவனம், ஆயுள் காப்புறுதி நிறுவனத்தின் வங்குரோத்து நிலைமையினால் பாதிக்கப்படும். வாடிக்கையாளர்களின் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் $200,000 இலட்சம் டொலர் வரை உத்தரவாதம் வழங்குவதுடன், உடல் இயலாமை காப்புறுதி ஒப்பந்தம் வைத்திருப்போர் ஒவ்வொருவருக்கும் (Disability Insurance) வழங்கும் மாத நட்டஈடு நிவாரணத்திற்கு மாதம் $2,000 டொலர் வரை உத்தரவாதம் வழங்குகின்றது.

இதேபோல் காப்புறுதி கம்பனிகளில் வைத்திருக்கும் பதிவு செய்யப்பட்ட, செய்யப்படாத ஓய்வூதியத் திட்டங்களுக்கும், சேமிப்பு திட்டங்களுக்கும் $60,000 டொலர் வரை உத்தரவாதம் வழங்குகின்றது.



உடல் நோய், மருத்துவக் காப்புறுதிகளுக்கும் (Critical Illness Insurance) $60,000 டொலர் வரை

தொடர்ச்சி 17ம் பக்கம்


# SRI PARADISE Catering & Take -out

416.269.4509



292 Markham Road, Scarborough, ON

| திங்கள் - செவ்வாய் சிங்கப்பூர் நூடில்ஸ் (கோழி மரக்கறிகளுடன்) | புதன் - வியாழன் கொத்துரொட்டி ஆடு மாடு கோழி | வெள்ளி மரக்கறிச்சாப்பாடு 5 மரக்கறி, சலாட், பப்படம், ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு, பாயாசம், வடை | Daily special மரக்கறிச்சாப்பாடு 3 மரக்கறி சலாட், பப்படம் ரசம், மிளகாய்ப்பொரியல், அச்சாறு | Dinner Special சிங்கப்பூர் நூடில்ஸ் கோழி மரக்கறிகளுடன் | சனி - ஞாயிறு Lunch Special வாழையிலைச் சாப்பாடு கோழி, ஆடு, மாடு, இறால், நண்டு, மீன், முட்டை, கருவாடு, அச்சாறு, கட்டைச் சம்பல், மீன் பொரியல், கட்லட், உருளைக் கிழங்கு, நெத்தலி பிரட்டல், கத்தரிக்காய் பிரட்டல் |
|---|---|---|---|---|---|
| $2.99 | $2.99 | $4.50 | $2.99 | $2.99 | $5.99 |



| பரடைசின் Special புரியாணி, தண்டூரி சிக்கன், இஞ்சிச் சம்பல், salad | Dinner Special மசாலா தோசை, சாம்பாறு, சம்பல் | Daily Special பரடைசின் Special புரியாணி சிக்கன்கறி சலாட் முட்டை |
|---|---|---|
| $2.99 | $1.99 | $2.99 |

### *Sri Paradiase Specials*

- 10LB அவித்த கோதுமை மா - $3.99
- ரொட்டி .50¢
- விசேட வைபவங்களுக்குத் தேவையான 6 வகையான Combo package. 20 பேர் கொண்ட சபைக்கு $99 மட்டுமே.
- மாதத்திற்குரிய சாப்பாடு - 1 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $99.00
  2 நேரச் சாப்பாடு 1 மாதத்திற்கு - $150.00

சமையலில் அனுபவம் உள்ளவர்கள் வேலைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்

25 மேல் கொள்வனவு செய்வோருக்கு 10LB அவித்த மா இலவசம்

# குழந்தைகளுடன் இருத்தல்...

தட்டுமுட்டு சாமான்கள் (Furniture) என்பன இருத்தல் கூடாது. குழந்தைகளுடன் இருப்போர் கட்டாயமாக வேலை நேரத்தில் புகைபிடிக்கக் கூடாது. குழந்தைகளுடன் இருக்கும் போது குழந்தைகளுடன் இருப்பவர்கள் புகைப்படித்து பல தீ விபத்துக்கள் ஏற்பட்டு குழந்தைகள் மரணமாகியுள்ளன. குழந்தைகளுக்கு உணவு தயாரிக்க சமையல் அறைக்கு செல்வதானால் குழந்தைகளை விளையாடும் தொட்டியினுள் (Playpan) விட்டு விட்டு செல்ல வேண்டும்.

குழந்தைகளுன் இருக்கும் போது விபத்து அல்லது ஆபத்து ஏற்பட்டால் 911ஐ அழையுங்கள். அவ்விபத்து சிறியதாக இருந்தால் பெற்றாரை அல்லது பாதுகாவலரை அழைக்கலாம். குழந்தைகளுடன் இருக்கின்ற வேலை செய்ய விரும்புகிறவருக்கு முதலுதவி பயிற்சி (First Aid) தெரிந்திருத்தல் அவசியம். அவர்களுக்கு செயற்கை சுவாசம் அளிக்கும் பயிற்சி (CPR) தெரிந்திருந்தால் மிகவும் நல்லது.

குழந்தைகளுக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டால் முதலில் இரத்தப் பெருக்கை நிற்பாட்ட சிறிது நேரம் மெதுவாக காயத்தில் அழுத்த வேண்டும். (Applying gentle pressure) இதற்கு ஒரு தூய துணியை காயத்தின் மேல் போட்டு மெதுவாக அழுத்தலாம். இரத்த பெருக்கு நின்றவுடன் காயத்தை தூயநீரில் கழுவிவிட்டு கட்டுப் போட்டு விடலாம். (Bandage)

குழந்தைகள் எதையும் விழுங்கி விட்டால் 911 இனை அழைப்பதோடு அவர்கள் விழுங்கிய பொருள் வந்த பாத்திரத்தை (Container) கையுடன் வைத்திருங்கள். அவர்கள் விழுங்கிய பொருளிலுள்ள பதார்த்தங்களை அப்பொருள் வந்த பாத்திரத்தில் இருந்து தொலைபேசியில் வாசித்துக்காட்ட உதவியாக இருக்கும்.

குழந்தைகளுக்கு நெருப்பு பிடித்தால் எவ்வாறு விழுந்து உருளவேண்டும் என்று காட்டிக் கொடுத்தல் எப்பவும் நல்லதே. சிறிய நெருப்புக் காயங்கள் ஏற்பட்டால் குளிர்நீரால் கழுவி தோல்வலியை குறைக்கலாம். காயம் பெரிதாக இருந்தால் 911ஐ அழையுங்கள். வீட்டில் நெருப்பு ஏற்பட்டால் குழந்தைகளுடன் வெளியில் ஓடி விடுங்கள். வீட்டினுள் இருந்து 911 இற்கு அழைக்க முயல வேண்டாம். அருகில் உள்ள வீட்டை சென்று அங்கிருந்து 911ஐ அழையுங்கள்.

மூச்சுத்திணறல் ஏற்பட்டுவிடும். குழந்தைகளுடன் இருக்கும் வேலைக்கு செல்ல விரும்புவோர்கள் அது சம்பந்தமான வகுப்புகளுக்கு சென்று, முதலுதவி பயிற்சி பெற்று அதன் பின்னர் வேலைக்கு சென்றால் அவ்வேலை அவர்களுக்கு இலகுவாக அமையும். திட்டமிட்டு செய்தால் எவ்வேலையுமே இலகுவாக இருக்கும்.

தகவல் - The weekly times of India
தமிழில் - சிவஞானநாயகன்

# இலங்கையில் விரைவில்...

என்பது சுதந்திரக் கட்சிக்கே தெரியாமல் இருந்தது. இந்த வேட்பாளரைத் தெரிவு செய்வதன் மூலம் சுதந்திரக் கட்சியே உடைந்து விடும் என்றும் நம்பப்பட்டது. இந்த ஊகங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டது.

இலங்கையின் இன்றைய பிரதம மந்திரியான மகிந்த ராஜபக்ச சுதந்திரக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளார். இந்தச் செய்தியை செய்தியாளர்களிடம், சிறீலங்கா அமைச்சரவைப் பேச்சாளர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார். மகிந்த ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால், பிரதம மந்திரியாக அனுரா பண்டாரநாயக்க பதவி ஏற்பார் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக இலங்கைத் தேர்தல் ஆணையாளர் ஒரு முடிவுக்கு வரவேண்டிய நிலைமையில் உள்ளார். அவர் ஏற்கனவே ஒரு முடிவுக்கு வந்து விட்டார் என்றும், ஜனாதிபதி தேர்தல் எப்போது நடைபெறும் என்ற காலத்தை அவர் அறிவிக்கத் தயாராகிவிட்டார் என்ற தகவலும் வந்துள்ளது.

இந்நிலையில் இலங்கையின் தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்க தனக்கு கீழ் உள்ள இரு உதவித் தேர்தல் ஆணையாளர்களிடம் பேச்சுக்கள் நடத்தி, இலங்கை ஜனாதிபதித் தேர்தல் எப்போது நடத்தப்பட வேண்டும் என்பது பற்றித் தனித்தனியான இரகசிய அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தான் ஏற்கனவே எடுத்த முடிவு சரியானதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே தேர்தல் ஆணையாளர் இந்த அறிக்கைகளைப் பெற்றுக் கொண்டுள்ளார் என்று கூறப்படுகின்றது.

உதவித் தேர்தல் ஆணையாளர்களின் கருத்துகளுக்குப் பின்னர் இலங்கையின் தேர்தல் ஆணையாளர் தனது முக்கியமான அறிவிப்பை எந்த நேரமும் அறிவிக்கலாம் என்று எதிர்பார்க்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

நிலைமை இவ்வாறு இருக்க இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதியை தேர்தல் ஆணையாளர் உடனடியாக அறிவிக்க உத்தரவிடும்படி கோரியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அடிப்படை மனித உரிமை மனுவாக வெள்ளிக்கிழமை இந்த வழக்கு சட்டத்தரணி தர்மதாச கோமஸ் என்பவரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுவில் தேர்தல் ஆணையாளர், மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிக்கப்பட்டுள்ளனர்.

“அடுத்த ஜனாதிபதி தேர்தல் எப்போது என்று அரசியல் கட்சிகள் தொடக்கம் எல்லோருக்கும் குழப்பமாக உள்ளது. இலங்கையின் குடிமகனாகிய எனக்கு உரிய திகதியை அறிய உரிமை உண்டு“ என்று மனுதார் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஜே.வி.பி மகிந்த ராஜபக்சவுக்கு நிபந்தனை விதித்துள்ளது. பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ராஜபக்ச முடிவெடுத்தால் மட்டுமே அவரை ஆதரிப்பது, அல்லது போனால் தமது சார்பாக ஒரு ஜனாதிபதி வேட்பாளரை நியமிப்பது என்று ஜே.வி.பி அறிவித்துள்ளது.

நிலைமைகளின் படி மகிந்த ராஜபக்ச மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக தமிழீழ விடுதலைப் புலிகள் மிகச் சீற்றமாக உள்ளனர். சிறுபான்மை இனத்தவரான தமிழர்கள், முஸ்லீம்கள், மற்றும் மலையகத் தமிழர்களின் வாக்குகள் இம்முறை ஐ.தேசிய கட்சியின் வேட்பாளரான ரனில் விக்கிரமசிங்கவுக்கே கிடைப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்று பெருமளவு நம்பப்படுகின்றது. எனவே ஜேவிபி என்ன கூத்து ஆடினாலும் இலங்கையின் அடுத்த ஜனாதிபதி ரனிலே என்ற அபிப்பிராயம் அரசியல் வட்டாரத்தில் பலமாக நம்பப்படுகின்றது.


தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா



• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(14 Years Insurance Claims Experience)

416-245-6555 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416-755-2801 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON

SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL







Fork Lift licence
$75.00

Truck licence
$899.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

• A-Z & D-Z up grade • One on One Training
• Job Placement Right Away!
• உடனடி வேலை வாய்ப்புக்கள்
•வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake
$200.00

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618 / 416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

mhc

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM / NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537 / 416-291-3022

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

# SAFETY TRUCKS

## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




### In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (11 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**18 Years Canadian Experience with Trucks**

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

905-793-9546 / 416-616-5979

250 Summerlea Road, Brampton, ON

# DEBT & MORTGAGE SOLUTIONS !!



- கடன் தொல்லையா?
- கடன்காரர்களின் தொந்தரவா?
- Credit பிரச்சனையால் Mortgage கிடைக்கவில்லையா?

## கவலைப்படாதீர்கள்!

அனைத்து வித பொருளாதார பிரச்சனைகளுக்கும் தீர்வு காண

முதல், இரண்டாவது, மூன்றாவது Mortgage பெற அழையுங்கள்

## ராஜ்

416-835-6695

## Call : 'RAJ'

for all kinds of Debt & Mortgage Solution

Lendingtree.ca

# Neelam silk

சுபமுகூர்த்தப் பட்டுக்கு என்றுமே இராசியான இடம்

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

## நீலம் சில்க்

- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAPAN CRYSTAL SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE



பட்டுத் தெரிவுகள் அனைத்துக்கும்

"நீலம் சில்க்"

T.P: 416-778-7455 Fax: 416-778-8484

1453 GERRARD STREET, EAST (INDIAN BAZZAR)

T.P: 416-759-2002

2378 EGLINTON AVE., E. (Kennedy Rd. & Eglinton Ave, Scar.)

# NTE AUTO

## New Trade Engineering Inc.



ஸ்காபரோவில் 14வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN

416.750.1573

## என். ரி. இ. ஓட்டோ இங்க்

151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# என் வாழ்வை உயர்த்திட என்னால் மட்டுமே முடியும்

வாழ்க்கையில் இழிவானதாகத் தென்படு பவற்றையும் ஏற்று எனது தீவிர முயற்சியால் அவற்றை உத்தமமானவையாக மாற்றக்கூடிய சக்தியும் திறமையும் எனக்குள் இருக்கின்றது என்பதை இன்று மனப்பூர்வமாக உணர்ந்து கொள்கிறேன்.

## ஆளுமை (56) வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

உன் எண்ணம் உன்னைத் துன்புறுத்துகின்றதா? உடனடியாக அச்சிந்தனையை மாற்று. உனது உணர்வுகள் உன்னைத் துக்கத்தில் மூழ் கடித்தால், உனது உணர்ச்சிகளை மாற்றி அமைத்து விடு. உனது செய்கைகள் உன்னை ஒன்றுக்கும் உதவாதவனாக்கினால் சீக்கிரம் உனது செயற்பாடுகளில் மாற்றத்தை ஏற்படுத்து.

தாங்க முடியாத சோக உணர்வுகள் அநுபவங்களுடன் பழகப் பழக, அவற்றில் ஒரு திருப்தியை நாம் காண ஆரம்பித்து விடுவோம். எமக்குப் பிடிக்காத, எமது கட்டுப்பாட்டுக்குள் அடங்காத அநுபவங்கள் நிறைந்த இந்த வாழ்வு, ஒருபோதும் மாறாது, வருங்காலத்திலும் இதே மாதிரிதான் இருக்கப் போகிறது என்பதை ஏற்றுக்கொள்ளப் பழகி விடுவோம். இது ஒரு விதத்தில் உண்மைதான். உனக்கு வெளியே நடப்பவற்றை உன்னால் மாற்றுவது கஷ்டமான காரியம் தான். ஆனால், உனக்கு நடப் பவற்றிற்குப் பதிலாக நீ எப்படி நடக்கிறாய் என்பதை மாற்றிக் கொள்வது உன் கைகளில் தான் இருக்கிறது என்பதை மறந்து விடாதே.

வாழ்வின் ஒவ்வொரு அநுபவமும் எம் இதயத்திலும் உள்ளத்திலும் தனது அடையாள முத்திரையைப் பதித்துவிட்டே விடுகின்றது. இந்த அநுபவச் சுவடுகள் சில சிந்தனை-களையும், உணர்வுகளையும் எமக்குள் கட்டி யெழுப்புகின்றன. இந்த அநுபவச் சுவடுகள் சில சிந்தனைகளையும் உணர்வுகளையும் எம் முன் எழுப்புகின்றன. எமக்குள் கெட்ட சிந்தனைகள், உணர்வுகள் ஏற்படுத்திடும் அநுபவங் களை நாம், “இல்லை! இப்படி நாம் நினைக்கக் கூடாது. செய்யக்கூடாது,” எனத் தவிர்த்துக் கொள்ள எமக்கு உரிமை உண்டு. ஆம்! நீ உன்னுடனேயே சம்பாஷிக்க வேண்டும். உனது புத்தியுடன் நீ பேச வேண்டும், உனது இதயத் துடனும் நீ உறவாட வேண்டும். உன்னைச் சூழ்ந்து உன்னை விழுங்கி ஏப்பம் விடத் தருணம் பார்த்துக் கொண்டிருக்கும் அக்கரிய தீய சக்தியுடனும் பயப்படாமல் பேசு, ‘இல்லை! நானே என்னை இழிவாகக் கருத வைக்கும் எண்ணங்களுக்குள் என்னை இழுத்துப்போட்டு மூழ்கடிக்க நிச்சயம் உன்னை நான் அநுமதிக்கப் போவதில்லை’

“இல்லை! நான் கட்டாயம் கோபித்துக் கத்தி சண்டை பிடிக்க வேண்டுமென்று என்னை வற்புறுத்திக் கட்டாயப்படுத்த உன்னால் இனி முடியவே முடியாது! என்னதான் நடந்தாலும் இனி நான் நல்லதைத் தான் சிந்திப்பேன், சொல்வேன், செய்வேன்! தீயவனாகிய உன்னைக்கூட இனி எப்போதும் நீ உள்ளபடியே நேசித்து, உள்ளபடியே ஏற்றுக் கொள்ளப் போகிறேன். இது உனக்குப் பிடிக்காவிட்டால், உனது தீய சக்தியைச் சுருட்டிக் கட்டிக் கொண்டு நீ ஓடிப் போய் விடு!”, இவ்வாறு உனக்குள் உருவாகும் தீய உணர்வுகளிற்கு நீ ஓரிருமுறை, பதிலளித்தவுடன் எவ்வளவு வேகமாய் அது உன்னை விட்டு விலகித் தூர ஓடிப்போய்விடும் என்பதைப் பார். நீயே ஆச்சரியப்படுவாய்!

இன்றுவரை, கூடாத எண்ணங்கள், தீய உணர்வுகள் கெட்ட அநுபவங்கள் யாவும் சூழந்து உன்னை விழுங்கி விட நீ அநுமதித் திருக்கலாம். ஆனால் நீ அநுமதித்தாலன்றி தீயது ஒன்றுகூட உன்னை அணுக முடயாது என்பதை உனக்கு நினைவூட்டிக் கொள். இனி உன் சிந்தனை, சொல், செயல் யாவும் நல்லதாக இருக்கட்டும்.

இன்றுவரை எனைச் சூழ்ந்திருக்கும் எனது வாழ்வு நிலமைகளுடன் நான் சம்பாஷித்து என் வாழ்க்கையை மேம்படுத்த முயற்சி செய்ய ஆரம்பிக்கிறேன்.


மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-624-9617

லலிதா புரூடி








யோகா சோதிடம்

• கிரகப் பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361



YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

• Venetian Blinds • Pleated Shades
• Vertical Blinds • Cellular Shades
• Roller Shades

FREE ESTIMATE

உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்



விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON

visit us online at www.divinehome.com



25%-45% OFF

கைகளால் செதுக்கப்பட்ட பூஜைமேடைகள்
அன்பளிப்புப் பொருட்கள்,
சுவாமிப்படத்தட்டுகள், படங்கள்
சுவாமி சிலைகள்,
பூஜையறை அலங்காரப் பொருட்கள்

ஒவ்வோரு வீட்டிற்கும் ஏற்ற சுவாமிப்படத்தட்டுகள்

Scarboroughவில் Eglinton & Bellamy சந்திப்பில்

DIVINE HOMES

Peace & Prosperity

தெய்வ இல்லம் அமைதிக்கும், சேழுமைக்கும்

100ற்றும் அதிகமான தெரிவுகள்

2-2956 Eglinton Avenue East, Scarborough
Call: 416-289-1043, 416-999-3997

புதிய கிளை Brampton மாநகரில்

HWY 10/Sandalwood
114 Masters Cr., Brampton
Tel: 905-495-4208

Special Design & Custom Orders Available... Call for more info...







Buy Direct From Manufacturer: Prices Slashed



# ஆரோக்கிய வாழ்வு

**N. செல்வசோதி**

## என்றும் பெண்களிடம் இளமை ஊஞ்சலாட



இளமையோடிருக்க அனைவரும் மிகவும் விரும்புவார்கள்தான். அதிலும் பெண்களுக்கு இளமையாகவும் அழகாகவும் இருக்கவேண்டு மென்ற அவா மிகவும் அதிகம். அவர்கள் அப்படியே இருக்க வேண்டுமென்று அநேகமான ஆண்களும் விரும்புவர். தாங்கள் இளமையோடிருக் கிறார்களோ இல்லையோ அதைப்பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. ஆனால் தமது மனைவிமார்கள் என்றும் இளமைத் துடிப்புடன் இருக்கவேண்டுமென்றே விரும்புவர்.

ஆனால் இதில் இன்னுமொரு விடயம் பெண்கள் இளமையுடன் இருக்கவேண்டிய கட்டாயமும் உண்டு. ஆண்கள் ஒரு வேலையிருந்து ஓய்வுபெற்றுவிடுவர். பெண்களோ என்றுமே வீட்டின் வேலையிலிருந்து ஓய்வு பெறப் போவதில்லை. ஆயுட்காலம் வரைக்கும் குடும் பப்பொறுப்புகள் இருந்து கொண்டேயிருக்கும் இதையாரும் மறுக்கமுடியாது.

சுறுசுறுப்பு - சுறுசுறுப்பு என்பது எந்தநேரத்திலும் எதையாவது செய்து கொண்டிருப்பதும் அல்ல. அவசியமில்லாத விடயங்களைப்பற்றி அடிக்கடி கதைத்து வீண்வாக்குவாதப்படுத்துவது அல்ல. அமைதியில்லாமல் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருப்பதும் அல்ல. தேவையானபோது செய்யவேண்டியதை உரிய காலத்தில் செய்வதைக் குறிக்கும்.

உடல்நலம் - உடலானது அன்றாடம் இயங்குவதற்கு வளையக்கூடியதாக, நிமிரக் கூடியதாக, குதிக்கக் கூடியதாக, சடுதியாகத் திரும்பக்கூடியதாக, தன்மனத்தில் ஏதேனும் தோன்றியவுடன் உடன் செயல்படக்கூடியதாக எல்லா உறுப்புக்களும் ஒன்றோடொன்று ஒத்துழைத்து இயங்கக்கூடியதாக இருப்பதுதான் உடல்நலம் ஆகும். வெப்பத்தையும், குளிரையும் தாங்கக்கூடியதாக புறச் சூழ்நிலையால் பாதிப்படையாது இருப்பதுதான் சிறந்த உடல்நலம் எனலாம். பற்களை நல்லமுறையில் பாதுகாத்தல் இளமைத் தோற்றத்தை அதிகரிக்கும்.

கவனிக்கக்கூடிய கண்கள் எந்த ஓசையையும் கேட்டறியக்கூடிய செவிகள், நன்கு உச்சரித்துப் பேசக்கூடிய நாக்கு எதையும் நழுவிவிடாமல் பிடிக்கக்கூடிய விரல்கள், சுழன்று இயங்கும் கைகள், எழிதாக நடக்கக்கூடிய கால்கள், கனம் இல்லாத இலேசான உடல் அமைப்பு என்பனவற்றை உடையதே உடல்நலம். அதுவே இளமை.

இளமை வேண்டும் - பார்ப்பதற்கு முகம் நன்றாக இருந்தால், முடி நரைக்காமல் இருந்தால், தோல் சுருக்கமற்று இருந்தால் மட்டும்தான் இளமை என்று கூறிவிடமுடியாது. நடக்கவே சிரமப்பட்டுக் கொண்டிருப்பதை இளமை என்று கூறலாமா? எனவே இளமை என்பது உடல் நலம், மனநலம் இரண்டையும் கொண்டிருப்பதே யாகும்.

கவர்ச்சியான தோற்றம் உண்டாக உணவு முறைகள் - நார்ச்சத்து மிகுந்த உணவுகள் இளமை நிலைக்க உதவும், கரட், முட்டைக் கோவா, வாழைக்காய் போன்ற மரக்கறி வகைகள் ஆரோக்கியத்திற்கு உதவுவதோடு சருமத்தை அழகுற செய்ய உதவும். வெள்ளரிப்பழம், திராட்சை, அப்பிள் போன்ற பழவகைகளையும் உண்ணுதல் சிறந்தது.

எலும்மிச்சம்பழம் பிழிந்து சிறிது தேன்விட்டு இளஞ்சூடான தண்ணீரில் கலந்து காலையில் அருந்திவந்தால் இளமை என்றும் ஊஞ்சலாடும்.

அளவான தோற்றம்பெற - தோற்றம் எக்காரணம் கொண்டும் பருத்துவிடக்கூடாது. அதிகநேரம் சோபாவில் உட்கார்ந்து தொலைக்காட்சி பார்ப்பதையும் பகலில் அதிகநேரம் தூங்குவதையும் குறைத்துக்கொள்ளவேண்டும். நாளாந்தம் சிறிது நடைப்பயிற்சி அவசியம்.

யோகாசனப் பயிற்சி - தனுராசனம் - சலபாசனம்

பெண்களின் உடலை, மார்பை, கழுத்தை, வயிற்றை இழுத்துப்பிடித்து, அவற்றை அளவாகவும் வைத்திருக்க உதவும்.

சர்வாங்க ஆசனம் - உடல் எடை சரியான அளவுக்கு குறைந்து வருவதுடன் கோர்மோன்களைச் சரியாகச் சுரக்கச் செய்து கொழுப்பைக் குறைக்க இளமை ஊஞ்சலாடும்.

சாந்தி ஆசனம் - சவாசனம் - இந்த ஆசனத்தில் தினமும் அரைமணி நேரமாவது இருப்பதால் இரத்த அழுத்தம் சம அளவுக்கு வந்து மனம் அமைதிப்படுவதுடன் முகத்தின் அழகும் அதிகரிக்கும். அத்துடன் சிந்தனை கொதிப்படையாது நிதானம் உண்டாகும். மனம் சமநிலைப்படும்.

இளமை என்றும் ஊஞ்சலாட

மேற்கூறப்பட்ட பயிற்சிகளை உடலுக்கு உறுதியை அளித்து மனத்தைச் சாந்தப்படுத்துவதனால் முகத்தில் கருணையும் பூரிப்பும் ஏற்படுகிறது. இவைகள் தான் இளமையை நிலைக்கச் செய்யும். 20 வயதில் இளமை அழகு தரும். 40 வயதிற்கு மேல் ஒழுக்கம்தான் இளமையோடு அழகாக இருக்கச் செய்யும். உடலை இடையிடையே மசாஞ் செய்து கொள்வதாலும் ஆவியில் (Steam Bath) உடலை நனைத்துக்கொள்வதாலும் உடல்வலி ஏற்பட வாய்ப்பிருக்காது. உடல் அமைப்பிற்கேற்ப நிறத்திற்கேற்ற உடைகளை அணிந்து கொள்வது இளமையை மேலோங்கச் செய்யும்.




CARPET CLEANING

உங்கள் சகலவிதமான carpet , சோபா, Car interior மற்றும் அனைத்து Steam Cleaning தேவைக்கும் அழையுங்கள்

Rajan: 416. 455.9402





கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

- வீடு வாங்க விற்க மற்றும் இலவச ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள
- முதல் முறையாக வீடு வாங்குபவர்களிற்கான சலுகைகளை அறிய
- குறைந்த வட்டி வீதத்தில் Mortgage செய்து கொள்ள

அழையுங்கள் நந்தா








COLDWELL BANKER

Coldwell Banker Coburn Realty

Nantha Aiyadurai, B.Eng.
Sales Rep.
Office : 613.823.7555
Cell : 613.866.9931
Toll Free : 1 800 472.6512



Friendly & Confidential Service
Just Call Justin


Justin William
Sales Rep.
416 803 7344
www.justcalljustin.com
Bus: 416 321-6969
Fax: 416-321-6963

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife GTA Realty Inc.,
Real Estate Broker
1711 McCowan Rd., Suite 206,
Scarborough, ON. M1S 3Y3



Scarborough $259,000





High demand Brimley /Finch Area
3 +1 Bed room Free Hold Town House with Finished Basement

Markham $369,900





4+1 Bed room House in a Demand Area Lots of Upgrades $$$$$$$$$$$ Finished Basement with Washroom Walk to School and Ttc

Markham $79,900





Dry Clean/Laundry Well Established Dry Cleaner In A Very Demanding Markham Area Low Rent. Rent+Tmi=$1522.High Income

Markham $249,900





Lowest Price in Markham.
3 Bedrooms, 2 washrooms, Totally Renovated Don't Miss This... Walk to Steeles

Scarbogugh $329,900





Renovated 3+2 Bed Room Bungalow House 2 Kitchens, 2 washrooms, Basement Apartment

Scarborough $159,900





1+1 Bedroom Luxury Condominium Penthouse With Fireplace *Panoramic View Of City *Updated Unit.

புதுமனை புகுந்திட நம்பிக்கையான சேவை!

131

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்


கலகலப்பு தீசன்


**உதவி -** சிலர் உதவியை கேட்டுப் பெறுவர். சிலர் உதவியை தேடிச் சென்று செய்வார்கள். வேண்டுவோர் வேண்டுவதை ஈவான் கண்டால்.





உலகர் வீடு அமளி துமளிப்பட்டது. வீட்டின் பின்னால் கோழி கருகும் வாசம். கொழுப்பு வேண்டாம் இனிப்பு வேண்டாம் எனப்பயந்த ஆட்டிலறி அன்னம்மா செக்கண்புளோர் செல்லம்மா இருவரும் மெடிக்கல் செக்கப் செய்து கொலஸ்ரோல் குறைந்து விட்டது, சுகர் குறைந்து விட்டது. அடேயப்பா! அவர்கள் சந்தோஷத்திற்கு அளவேயில்லை. என்ன மருந்து பாவித்தீர்கள். ஓடி, ஓடி உழைத்து உண்டு களிக்கலாம் என்றவர்கள் வாழ்க்கை. நாக்கில் ருசியில்லை. காரணம் பிறசர் (உப்பு இல்லை). புளிப்பைத் தவிர இனிப்பு இல்லை. காரணம், சலரோகம் என பெருமூச்சு விடுவதைத் தவிர வேறு என்ன செய்ய?






முடிவு! உலகரின் மண்டை வெடித்துவிடும் போல் இருந்தது. ராசம்மாவின் துன்புறுத்தல் காரணமாக 3 நிமிடம் நடந்தாலே மூச்சிளைக்கும். சாப்பாட்டில் உப்பில்லை. வாழ்வில் இனிப்பு இல்லை. ஆனால் ஆட்டிலறி அன்னம்மா செக்கண்புளோர் செல்லம்மா உடம்பில் கொழுப்பு குறைந்திருக்கலாம். ஆனால் வாய்க்கொழுப்பு குறையவில்லை.



வழக்கமாக ரூபனின் காரில் கோயில், Park (பாக்) என திரிந்தவர்கள் ரூபனும், ரூபியும் ஜேர்மனி, இத்தாலி, பிரான்ஸ் என சுற்றுலா சென்றதால் ???
வரசித்திவிநாயகர் கோயில் திருவிழா. காலையும், மாலையும் பூசையும் திருவிழாவும் என சென்றார்கள். அதுமட்டுமல்லாமல் விரதம். பலன் உடலுக்கு நடைப்பயிற்சி, உணவுக்கு கட்டுப்பாடு விரதம்,



சைவசமயம் எத்தனை விடயங்களை அசாதாரணமாக மனிதனுக்கு போதித்துள்ளது. வெள்ளி விரதம், இரவு பாலும், பழமும் பல மைல் தூரம் நல்லூர், சன்னதி, மாவிட்டபுரம் என மாறி மாறி கோயில்களுக்கு நடந்து செல்வது கொல்ஸ்ரோல் கிட்டவருமா?
நடை நடந்து நல்லூருக்கு சென்று வந்தாலே கலகலப்பு, கலகலப்பு. படப்பாடல் நினைவுக்கு வருகிறது.

எனக்கு சரியான வருத்தம் என்று சொல்வதே சிலருக்கு வாய்ப்பாடம். தினமும் இதனைக் கேட்பவருக்கும் சினமாக இருக்கும். பிராங்பேட் பேரம்பலம் வெயிலில் களைத்தபடி வந்தார். வாரா, வாரம் ஊர் ஒன்று கூடல் கலைவிழா. இப்பொழுது கண் மூடித்திறப்பதற்கு ஏதாவது ஒரு விழா போஸ்டல் உலகர் போகாத விழாவா புது முகங்கள் இல்லை.

அதே கலைஞர்கள் மாறி மாறி. குறிப்பிட்ட பார்வையாளர்கள். சிலருக்கு ஊரில் உலகில் என்ன நடப்பதென்றே தெரிவதில்லை. வானொலியும் கேட்காமல், பத்திரிகைகளும் பார்க்காமல் நண்பர்கள் உறவினர்களின் மரணச் செய்தி கூட தெரியாதவர் பலர் இருக்கிறார்கள். உலகரின் மனம் உலகை சுற்றிவந்தது.



**உதவி -** எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து இந்தியாவில் வந்து சேவையாற்றிய அன்னை திரேசா மண்ணைவிட்டு மறைந்து வருடங்கள் பல. ஆனால் அவர் நினைவு மக்கள் மனதை விட்டு அகலவில்லை. தேடித்தேடி உதவி செய்தார். மரணம் உலகில் பல கஸ்ட நஷ்டத்தில் வாழ்ந்தவனுக்கு அமைதியைக் கொடுக்கிறது. மரணச் சடங்குகள் சூழ இருந்து அழுது கவலையை வெளிப்படுத்தி, இறப்பின் தன்மையை அறிந்து தம்மை பதப்படுத்திக் கொள்ளச் செய்கிறது. உலகர் நீண்ட பெருமூச்சுவிட்டார்.



ஆரம்ப காலத்தில் ரூபன், ரூபி உலகர் ராசம்மா சிறுசிறு சலப்புக்கள். இன்று சலசலப்பு மாறி சற்று கலகலப்பு. சிரித்தால் துன்பம் குறையும். தெரியாமலா சொன்னார்கள். உலகண்ணைக்கு கொழுப்பு குறைந்த கோழி ஒன்று எடுத்து குடு என்று சிரித்தா செக்கண்புளோர் செல்லம்மா. கோயில் திருவிழா வரையும் அனுங்கிய ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்புளோர் செல்லம்மாவும் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அத்தனகலையில் தேர்தல் பிரசார கூட்டத்தில் பேசியது போல கதைத்து சிரித்துக்கொண்டிந்தனர். இன்னும் நான்கு, ஐந்து கிழமைகள் தான் பழையபடி குளிர், பனி...



"நித்தம் நித்தம் மாறுகின்ற எத்தனையோ நாம்
நினைத்ததிலே நடந்தது தான் எத்தனையோ?

## சனி மாற்றமும் பனி மாற்றமும்



வயோதிபர் - எனக்கு சனி மாற்றம் சனிப்பெயர்ச்சி எப்படியிருக்கும்?

ஜோசியர் - சனிப்பெயர்ச்சி சனி மாற்றத்தைவிட உங்களுக்கு, மார்ச், ஏப்பிரல் வீட்டுக்கு முன்னுள்ள பனி பெயர்ச்சி நிச்சயம் இருக்கும். பனியெல்லாம் மாறிவிடும்.

வயோதிபர் - ???

- கலகலப்பு தீசன்

17 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 166

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | | | 3 |
| | | | | | 4 | | |
| 5 | | | | | | | 6 |
| | | | | | | | |
| | 7 | | | | 8 | 9 | |
| | | 10 | | 11 | | | |
| | | | | | | | |
| 12 | | 13 | | | | 14 | 15 |

**இட - வல**

1. முடிவுறச்செய்
3. குரங்கு (வல - இட)
5. இலை
6. முடிவு (வல-இட)
7. நிலா (வல-இட)
9. சொல்லு (வல-இட)
10. அறிஞன்
12. அமைத்தல்
13. புழுதி

**மேல் - கீழ்**

1. குற்றமற்றவன்
2. சம்பளம்
3. பனை ஓலை / நாரினால் செய்யப்பட்டது
4. நெருப்பு
8. யானையின் குட்டி
11. நிறம் (கீழ் - மேல்)
12. இரவு (கீழ் - மேல்)
13. நெஞ்சு (கீழ்-மேல்)
15. முறம் (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சு | ண் | ணா | க | ம் | | னி | நு |
| ய | | அ | ணி | | | | ங் |
| ம் | | | | கு | க் | ட | கு |
| வ | ச | ன | ந | டை | | | |
| ர | | | ட் | | ப | ட | கு |
| ம் | வ | ரு | பு | | சி | | ங் |
| | | | | ஆ | | த | ரு |
| நு | ணு | க் | க | ம் | | ய் | நெ |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் August 29, 2005க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


**165இல் வெற்றி பெற்றோர்**

1) K. Jegan, Toronto
2) P. Thayaparan, Mississauga

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]


# KITCHEN - CABINETS & COUNTER TOP





பல புதிய வடிவங்களில் உங்கள் சமையலறைகளை நவீன முறையிலும் அழகாகவும் வடிவமைத்துக்கொள்ளலாம்.



- Quality
- Reasonable Price

Call: 416.399.6640

# நாடகத்தின் தனித்துவம்

எங்குமே ஒரு பொதுவான மரபாகி விட்டது.

8. நாடகத்தை ஊர் ஊராக நடத்துதல். இது நாடகத்தை நோக்கி மக்கள் வரும் வழக்கத்துக்கு மாறாக மக்களை நோக்கி நாடகம் செல்லவேண்டும் என்னும் கோட்பாட் டில் அமைந்தது. இதன் அடிப்படை யிலேயே சுற்றுலா நாடகக் குழுக்கள் வளர்ந்தன.

9. நாடகங்களிற் கட்புல செவிப்புலக் கவர்ச்சிகளை உண்டுபண்ணிப் பார்வையாளரைக் கவரும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எடுப்பான காட்சி அமைப்பு,

உடையலங்காரம், இடம் பொருள் காலத்துக்கேற்ற ஒளி வேலைப்பாடுகள், புகையடிப்பு, மேலிருந்து இறங்குதல், கீழிருந்து ஏறுதல், உணர்ச்சிகளுக்கேற்ற ஓசை ஒலிகளை எழுப்புதல் போன்ற திரைப்படத் தனங்களை நாடகங்களிலும் பிரயோகிக்கின்றார்கள்.

10. தொழில்நுட்பங்களில் அதிகம் தங்கியிராத நாடகங்களும் பார்வையாளரைக் கவரவல்லன என்பதற்கு இந்தியாவின் மராட்டிய அரங்கங்கள் உதாரணங்களாக விளங்குகின்றன.

11. வெறும் மேடைகளில் மிக எளிமையான முறையில் அரங்கேற்றப்படும் இந்நாடகங்களைப் பார்க்க ஆயிரக் கணக்கில் மக்கள் கூடுகின்றனர். அரங்காடல் மரபுகளை முற்றாகப் புறக் கணிக்கும் மராட்டிய அரங்க முறைகள் மேற்குலகத்திலும் பரவத் தொடங்கியுள்ளன. வலுவான கதையும் கருத்துள்ள வசனங்களும் இயல்பான நடிப்பும் இருந்தால் போதும் என்கின்ற மனப்பாங்கு பார்வையாளர் மத்தியில் வளரத் தொடங்கிவிட்ட பகுதிகளில் அவர்களுக்கேற்ப நாடகங்களைத் தயாரித்து அளிப்பதையே நோக்காகக் கொண்டு நாடகக் குழுக்களும் செயற்பட்டு வருகின்றன.

12. இனி, வயதுக்கேற்ற நாடகங்கள் மூலம் அந்தந்த வயதினரைக் கவரும் முயற்சிகளும் சில குழுக்களால் மேற்கொள்ளப்படுவதுண்டு. முதியோர் பிரச்சினைகள் பற்றிய நாடகங்கள் முதியோரையும் காதல் நாடகங்கள் இளைஞர் உலகத்தையும் கவரக்கூடியன. சிறுவர் நாடகங்களாயின் சிறுவர்களை அழைத்துக்கொண்டு பெற்றோருஞ் செல்வர்.

இவைபோலவே பழமைவாதிகளுக்கு மரபுரீதியான நாடகங்களும் புதுமைவாதிகளுக்குப் புதிய உத்திகளோடு கூடியவையும் தயாரிக்கப்படுகின்றன.

எனினும் எல்லோருக்கும் உகந்ததாக நாடகங்களைத் தயாரித்து அளிப்பதே பொது வழக்காக இருந்து வருகின்றது.

13. பழைய நாடக முறைகளை முற்றாகப் பின்பற்றாது, அவற்றைப் புதிய யுகத்தின் வேகத்துக்கும் விழுமியங்களுக்கும் இசைவாக மாற்றியமைத்தும் நாடகங்கள் அரங்கேற்றப்படுகின்றன. இவ்வித பழமையிற் புதுமைகாணும் அரங்கங்கள் இருதரப்புப் பார்வையாளரையும் கவரும் நோக்குடையவை.

